9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தகன நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதம் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் வசதியீனம் அல்லது நட்டம் சம்பந்தமாக தெஹிஓவிட்ட பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் வகைப்பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது.

10. தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக இத்துணை விதியின் ஆறாவது அட்டவணைக்கு அமைவாக விபரங்கள் ஒன்றுசேர்க்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டுவருதல் வேண்டும்.

11. (அ) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவரால் குறித்த பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

(ஆ) பூதவுடலை தகனம் செய்வதற்காக தகன நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளும்போது பூதவுடலைத் தகனம் செய்ததன் பின் அஸ்தியை பாதுகாப்பாக வைப்பதற்காக மரணித்தவரின் பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட பாத்திரமொன்றினை (இறுக்கமாக மூடியை மூடக்கூடிய, மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களால் தகனசாலைப் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) தகன நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தியை மரணித்தவரின் நெருக்கமான ஒரு உறவினருக்கன்றி ஒப்படைத்தல் கூடாது.

(ஈ) அவ்வாறிருந்தும் விண்ணப்பதாரியின் எழுத்துமூலமான வேண்கோளிற்கிணங்க தவிசாளரின் அதிகாரம் பெற்ற அலுவலரின் குறித்த அஸ்தியினை தகன நிலையம் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக் கொள்ளும் கால எல்லையை நீடிக்கலாம்.

(உ) (ஈ) பந்தியின் கீழ் அஸ்தி தகன நிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(ஊ) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளர் அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(எ) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் பணியாதல் வேண்டும்.

(ஏ) தகன நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தியினை 11 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஒப்படைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் இட்டு கவனமாக நிமித்த வேலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் அல்லது கூடத்தில் தகன நிலைய பொறுப்பாளரினால் வைக்கப்படுதல் வேண்டும்.

12. (அ) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளும் உட்பிரவேசித்தல் ஆகாது.

(ஆ) தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி எவரும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்,-

(i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஒரு நபர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் மற்றும்.

(ii) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுள்ளவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

(ஈ) இத்துணை விதியினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படுகின்ற எவையேனும் பிரச்சினையொன்றின் போது தவிசாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும். இத்துணை விதியினை மீறும் சந்தர்ப்பத்தில் அதற்காக தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் ரூபா எழுநூற்றி ஐம்பதிற்கு மேற்படாத தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். மேலும் தொடர்ந்தும் குறித்த தவறிற்காக குற்றவாளியாக்கப்பட்டால் குறித்த தவறைப் புரிகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஒரு நாளைக்கு ரூபா 250 இற்கு மேற்படாத தண்டத்திற்கும் குறித்த நபர் உட்படுதல் வேண்டும்.

13. ஏதேனும் தகன நிலைய வளவினுள்.-

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்
(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள தெஹிஓவிட பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்.
(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்.
(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல் ஆகாது.
(உ) தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்கின்ற ஒருவரினால் ஏதேனும் ஒரு சொத்திற்கு அல்லது கட்டடமொன்றிற்கு அல்லது உபகரணத்திற்கு நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டால் தவிசாளர் விதிக்கின்ற மதிப்பீட்டுப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்பவர் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

14. (அ) பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகனநிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதலும் தெஹிஓவிட பிரதேச சபை தவிசாளர் பணியாதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் தெஹிஓவிட பிரதேச சபை தவிசாளர் பணியாதல் வேண்டும்.

15. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்.-

'தகனநிலைய கூடம்' என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக்கூடமும்

'தகன நிலைய வளவு' என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்

'தகன நிலையத்தின் பொறுப்பாளி' என்பது அப்போதைக்கு தெஹிஓவிட பிரதேச சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியர்.

'அஸ்தி' என்பது ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர் பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்

"பூதவுடல்" என்பது மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழு பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடலும் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும் கருதப்படல் வேண்டும்.

16. இத்துணை விதியில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் பொருத்தமற்ற ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப் பிரதி வலுவுள்ளதாய் இருத்தல் வேண்டும்.

### முதலாவது அட்டவணை

### தகன நிலையத்தைப் பாவிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 01. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | 6,500.0 |
| 02. | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வதியும் ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | 7,500.0 |

### இரண்டாவது அட்டவணை

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்) (முன்பக்கம்)

### தெஹிஓவிட பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
   முகவரி :-----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.
2. மரணமடைந்தவரின் முழுப் பெயர் :-----.
   ஆணா/பெண்ணா ? :-----.
   வசித்திருந்த இடத்தின் முகவரி :-----.
   கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
3. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உள்ள தொடர்பு :-----.
   (உறுதிப்படுத்துவதற்கு 5 ஆவது துணைவிதியின் (அ) பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)
4. மரணச் சான்றிதழின் பதிவு இலக்கமும் திகதியும் :-----.
   (மரணச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
5. மரணத்தைப் பதிவுசெய்த செயலாளரின் பெயரும் பிரிவும் :-----.
6. மரணத்திற்கான காரணம் :-----.
7. மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்தப்பட்டிருப்பின்,
   (5 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சான்றிதழை இணைக்கவும்)
   விசாரணை அலுவலரின் பெயரும் அந்தஸ்தும் :-----.
   விசாரணை நடத்தப்பட்ட தினம் :-----.
   விசாரணை அலுவலரின் முடிவு :-----.
   பூதவுடலைத் தகனம் செய்வதற்கு மரண பரிசோதகர் அனுமதி வழங்கியுள்ளாரா? :-----.
8. தகனம் செய்வதற்குக் கோரும் தினமும் நேரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இங்கு காட்டப்பட்டுள்ள தகவல்களின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**மூன்றாம் அட்டவணை**

திரு./திருமதி/செல்வி :
............................................
............................................

**பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தல்**

உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள (மறுபக்கத்தில்) விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம், கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம், அனுமதி நிராகரிக்கப்படுவதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(i) .............................................. .
(ii) .............................................. .
(iii) .............................................. .
(iv) .............................................. .
(v) .............................................. .

----,
தவிசாளர்/அதிகாரம் பெற்ற
அலுவலரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இலச்சினையை பதிக்கவும்)

திகதி : -----.

.................
தகன நிலைய பொறுப்பாளி,
தகன நிலையம்,
தெஹிஓவிட்ட பிரதேச சபை.

**நான்காம் அட்டவணை**

**சடலத்தை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

(அ) ............................................. என்பவரின் பூதவுடலை 20 ..... ஆண்டு ................... மாதம் ............ ஆந் திகதி முற்பகல்/பிற்பகல் ............ மணிக்கு .............. தகன நிலையத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகிறேன்.

விண்ணப்பப்பத்திரத்தில் (மறுபக்கத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் 6 ஆவது துணைவிதியின் பிரகாரம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

(ஆ) 20 ............. ................ .............. திகதிய ......... இலக்கத்தைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் ரூ.................. அறவிடப்பட்டுள்ளது.

(இ) இவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்ததாக 10 ஆவது துணைவிதியின் பிரகாரம் ஏற்புடைய பதிவேட்டில் பதிந்த பின்னர் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அனுமதிப்பத்திரம் பதிவேட்டின் தொடர் இலக்கம் ................ ஆகும்.

----,
தவிசாளர்/அதிகாரம் பெற்ற
அலுவலரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இலச்சினை பதிக்கவும்)

திகதி : -----.

### ஐந்தாம் அட்டவணை

### தெஹிஓவிட பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலை தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திர இடாப்பு

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய அ. அ. இலக்கம் | அனுமதிப்பத்திர இடாப்பு மற்றும் இலக்கம் | மரணித்த திகதி | மரண அத்தாட்சிப் பத்திரத்தினை பதிவு செய்த | | விண்ணப்பதாரரின் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலக்கம் | திகதி | பெயர் | மரணித்தவருடனான உறவு |
| 01 | | | | | | | | |
| 02 | | | | | | | | |

(**கவனத்தில் கொள்க :** இங்கு மேல் பகுதி இடாப்பின் இடப்பக்கத்திற்கும் கீழ்ப் பகுதி வலப்பக்கத்திற்கும் வரும் விதத்தில் இடாப்பினை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.)

| மரணித்தவரின் | | | தீதவான்/திடீர் மரண பரிசோதகரின் கட்டளையின் | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச்சீட்டின் | | | தகனம் செய்வதற்கான ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | | | |
| முகவரி | தேசிய அ. அ. இலக்கம் | கோவை இலக்கம் | திகதி | | இலக்கம் | ரூபா | சதம் | திகதி | நேரம் |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

### ஆறாம் அட்டவணை

### தெஹிஓவிட பிரதேச சபையின் தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய இடாப்பு

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய அ. அ. இலக்கம் | ஆண்/பெண் விபரம் | அனுமதிப்பத்திர இடாப்பு மற்றும் இலக்கம் | மரணித்த திகதி | மரண அத்தாட்சிப் பத்திரத்தின் பதிவு செய்த | | விண்ணப்பதாரரின் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இலக்கம் | திகதி | பெயர் |
| 01 | | | | | | | | |
| 02 | | | | | | | | |

(**கவனத்தில் கொள்க :** இங்கு மேல் பகுதி இடாப்பின் இடப்பக்கத்திற்கும் கீழ்ப் பகுதி வலப்பக்கத்திற்கும் வரும் விதத்தில் இடாப்பினை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.)

| மரணித்தவரின் தேசிய அ. அ. இலக்கம் | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச்சீட்டின் | | | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தியை எடுத்துச் சென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கம் | தொகை | | திகதி | நேரம் | |
| | | | ரூபா | சதம் | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

*12-27*

---

## தெஹிஓவிட்ட பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் சம்மதிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண, சபை உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாண மாகாண சபை.

சப்பிரகமுவ மாகாண மாகாண சபை அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
......................

### தெஹிஓவிட்ட பிரதேச சபை வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் குறித்த வீதிகளில் வாகனங்களைக் கையாளல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் சம்பந்தமான துணை விதிகள்

1. இத்துணை விதிகள் தெஹிஓவிட்ட பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் வாகனங்களைக் கையாளலை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2. (அ) தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசத்தில் ஏதேனுமொரு வீதியில் அல்லது வழியில் எந்தவொரு பாகத்திலும்,-

(i) வாகனங்கள் நிறுத்தி வைத்தலைத் தடை செய்தல்.
(ii) மட்டுப்படுத்தல்.
(iii) ஒரு பக்கத்தில் மாத்திரம் வாகனங்களை நிறுத்தி வைக்க இடமளித்தல்.
(iv) பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதலைத் தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல்.
(v) பிரயாணிகளை ஏற்றுதல் அல்லது இறக்குதலை தடைசெய்தல்.
(vi) பஸ் நிறுத்துமிடங்களைப் பெயரிடல்.
(vii) ஒரு திசையில் மாத்திரம் வாகனம் ஓட்டப்படுகின்ற பாதைகள் அல்லது வீதிகளைப் பெயர் குறித்து பயணம் செய்யக்கூடிய திசையைத் தீர்மானித்தல்.

ஆகியவற்றுக்கு தெஹிஓவிட்ட பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் 2 (அ) பிரிவின் கீழான ஏதேனும் மட்டுப்படுத்தல்களை மேற்கொண்ட பின்னர் அத்தகைய மட்டுப்படுத்தல் பற்றிய வீதிச் சமிக்ஞைகள் ஏற்புடைய இடத்தின் பொருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் தெஹிஓவிட்ட பிரதேச சபைத் தவிசாளரின் பணியாதல் வேண்டும். அத்தகைய மட்டுப்படுத்தல்கள் பற்றிய வீதிச் சமிக்ஞைகள், மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 164 ஆம் அத்தியாயத்துடன் வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட 1987, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய 444/18 ஆம் இலக்கமுடைய 1 ஆம் பிரிவு (1) ஆம் பந்தியில் உள்ள அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

3. தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசத்திற்குள் அல்லது தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் ஏதேனும் வீதியில் அல்லது வழியில் பயணம் செய்யும் எந்தவோர் வாகனத்தின் சாரதியால் 2 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியின் பணிப்புகளின் கீழ் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞையின் அல்லது சமிக்ஞைகளின் மூலமாகக் காட்டப்படுகின்ற பணிப்புகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

4. 3 ஆவது துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் 2 ஆவது துணைவிதியின் பணிப்புரைகளின் கீழ் தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்ட ஏதேனும் சமிக்ஞையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட எல்லைகள்.

(அ) அத்தகைய வீதியின் அல்லது வழியின் ஏதேனும் பாகத்தில் அல்லது தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியின் அல்லது வழியின் அண்மையிலுள்ள (ஏதேனும் கட்டிடத்தில் அல்லது அதன் அருகாமையில் ஏற்படும் ஏதேனும் தீ அல்லது வேறு ஏதேனும் அனர்த்தத்தை தடுத்து நிறுத்தும் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள தெஹிஓவிட்ட பிரதேச சபையின் தீயணைப்பு வாகனம் அல்லது வேறு ஏதேனுமொரு வாகனத்திற்காக அத்தகைய 3 ஆவது துணைவிதியின் பணிப்புக்களை மீறுவதாகக் கருதுதல் ஆகாது.

5. (அ) தெஹிஓவிட்ட பிரதேச சபை பிரதேசத்தினுள், இதனகத்துப் பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிடம்" எனப் அறியப்படும் மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் கருமத்திற்காக,-

(i) தெஹிஓவிட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் காணி அல்லது
(ii) வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய அத்தகைய அதிகார சபைக்குச் சொந்தமான ஏதேனும் இடத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு தெஹிஓவிட்ட பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடங்களில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகன வகைகள் மற்றும் ஒரே தடவையில் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைக் காலத்திற்குக் காலம் தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்க முடியும்.

(இ) 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாகனத் தரிப்பிடங்களையும் வருடாந்தம் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. சகல வாகன நிறுத்துமிடத்தில் குறைந்தபட்சம் வாகனங்கள் உள்ளே செல்வதற்கு ஒரு வாயிலும் அவை வெளியே செல்வதற்கு பிறிதொரு வாயிலுமென இரண்டு வாயில்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள்ளே வாகனங்களைத் திருப்புவதற்கென வேறான பகுதி அமைக்கப்பட்டிருக்குமாயின், அத்துடன் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் இரு திசையிலும் செல்லக்கூடிய இரட்டை ஓட்டப் பாதைகளும் கதவுகளுக்கான இடவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வாகனங்கள் உட்செல்வதற்கும் அவை வெளியேறுவதற்குமென ஒரு வாயிலை மாத்திரம் வைத்திருக்க முடியும்.

7. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கும் வருகை தரும் வாகனங்களுக்கு உள்ளே செல்லும் வாயில் மற்றும் வெளியே செல்லும் வாயில் இலகுவில் வாசிக்கக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தின் உள்ளே வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு உட்செல்லும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் செல்ல வேண்டிய திசைகளை இலகுவில் அறிந்துகொள்ளும் விதத்தில் 20 சென்ரி மீற்றர் அகலம் கொண்ட வெள்ளை நிற கோட்டுடனான அம்புக்குறிகள் இருத்தல் வேண்டும்.

8. (i) சகல வாகனங்கள் நிறுத்துமிடத்தின் தரை வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்ற விதத்தில் (தார் அல்லது கொங்கிறீற் அல்லது கீழே இடுவதற்காக உபயோகிக்கின்ற வேறு எவையேனும் ஒரு வகையான பொருள்) போடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு மழை வேலைகளில் அவ்விடத்தினுள் சேரும் நீர் இலகுவாக வடிந்தோடுவதற்காகப் போதியளவு வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாகன நிறுத்துமிடத்தை உபயோகிப்போரின் பாவனைக்காக ஆண், பெண் இரு பாலாருக்கும் வேறு வேறாக மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தவிசாளரின் பணியாகும்.

9. முடியுமான அனைத் சந்தர்ப்பங்களிலும் குறித்த ஒதுக்கீடுகளைச் செய்தல் தெஹிஓவிட்ட பிரதேச சபைத் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

10. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்திலும் வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி செய்கையில் வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே வரும் மற்றும் வெளியேறும் வாகனங்களுக்கு பயணிப்பதற்காக போதியளவு ஓட்டப்பாதைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஏதேனும் ஒரு வாகனம் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள் செல்லும்பொழுதும் நிறுத்தி வைக்கும் பொழுதும் அதனுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் வாகனத்திற்கு தடை ஏற்படாதவாறு ஒவ்வொரு வாகனமும் நிறுத்தி வைப்பதற்கு வாகனங்கள் நிறுத்துமிடத்தில் போதியளவு இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒதுக்கப்பட்ட எல்லைகளைக் காட்டும் 10 சென்ரி மீற்றர் அகலத்தைக் கொண்ட வெள்ளை நிறக் கோட்டினால் குறியீடு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

*12.* ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்காக தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறான கட்டணம் அறவிட முடியும். அவ்வாறே ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்துவதன் பொருட்டு அறவிடுவதற்கு தெஹிஓவிட்ட பிரதேச சபை தீர்மானிக்கும் கட்டணத்தை அத்தகைய வாகனங்கள் நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலில் நன்றாகத் தெரியக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

*13.* (அ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் கட்டணத்தை அறவிடுவதற்காக இதனகத்துப்பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிட பொறுப்பாளர்" என அறியப்படுகின்ற,-

(i) தெஹிஓவிட்ட பிரதேச சபையில் பணியாற்றும் எவரேனும் ஊழியர் அல்லது

(ii) தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் பகிரங்க கேள்விப் பத்திரத்தைக் கோருவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் வெற்றிகரமான கேள்வி பெறுநர் அல்லது அத்தகைய கேள்வி பெறுநரால் பெயர் குறிக்கப்படுகின்ற அவரது முகவரை ஈடுபடுத்த முடியும்.

(ஆ) எனினும், ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் 3 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தின் அளவை விஞ்சாதிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனமும் நிறுத்துவதன் பொருட்டு அறவிடப்பட்ட கட்டணத்தின் அளவு இப்பிரிவின் முதலாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு வாகனத்தின் சாரதிக்கு விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

*14.* வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் ஒவ்வொருவரும் அக்கருமத்தில் ஈடுபட்டுள்ள காலத்தில் தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டதும் வாகன நிறுத்துமிட பொறுப்பாளரென இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் உடை அணிந்திருக்கச் செய்தல் தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

*15.* (அ) 5 ஆவது துணைவிதியின் (அ) பந்தியின்கீழ் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு வாகன நிறுத்துமிடத்திற்கு பிரவேசிக்கையில் அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலருகில் அத்தகைய வாகனத்தின் சாரதியிடம் இப்பிரிவின் முதலாம் அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட உட்செல்வதற்கான அனுமதியைக் காட்டுகின்ற அனுமதி அட்டை ஒன்றை விநியோகித்தல் வாகனங்கள் நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரின் கருமம் ஆதல் வேண்டும்.

(ஆ) உட்பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட ஒவ்வொரு வாகனமும் வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர்,-

(i) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அட்டையை வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைத்தல்.

(ii) 12 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகளோடு ஒத்துவரக்கூடிய வாகனங்கள் நிறுத்தி வைக்கும் கட்டணத்தை வாகன நிறுத்துமிட பொறுப்பாளரிடம் செலுத்துதல் மற்றும்

(iii) செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு ஒத்துவரக்கூடிய 13 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் அத்தகைய வாகனச் சாரதியின் பணியாதல் வேண்டும்.

(இ) வாகன நிறுத்துமிடத்தை உபயோகிக்கின்ற நிலையான வாடகை வாகனங்களுக்கு இத்துணை விதியில் முதலாம் அட்டவணைக்கேற்ப பற்றுச்சீட்டுக்குப் பதிலாக 2 ஆம் அட்டவணைக்கேற்ப தயாரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றை சபையினால் 3 ஆம் அட்டவணைக்கேற்ப விதிக்கப்பட்டுள்ள கட்டணமொன்றினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டியதுடன் குறித்த அனுமதிப் பத்திரத்தினை வெளியில் புலப்படக் கூடிய விதத்தில் ஒட்டி வைத்தல் வேண்டும்.

(ஈ) இப்பிரிவின் முதலாம் அட்டவணைக்கேற்ப தயாரிக்கப்பட்ட உட்பிரவேசிக்கும் அனுமதிப்பத்திரமொன்றை விநியோகித்தல் மோட்டார் வாகனக் கட்டுப்பாட்டாளரின் பணியாதல் வேண்டும்.

*16.* (அ) எவரேனும் ஆளினால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு தெஹிஓவிட்ட பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்ட வகையைச் சேர்ந்த வாகனமல்லாத வேறு எந்தவொரு வாகனம் அல்லது மோட்டார் வாகனம் அல்லாத எந்தவொரு வாகனத்தையும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திவைப்பதற்கோ அல்லது வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே செல்வதற்கோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

(ஆ) வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியே எடுப்பதற்காக அத்தகைய வாகனம் இயங்கச் செய்விக்க முடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக வாகன நிறுத்துமிடத்தினுள் வரும் ஏதேனும் வேறு வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே கொண்டுவர போதியளவு இடவசதி இருப்பின் அவ்வாறு வரும் வேறு வாகனத்திற்கு (அ) பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது. எனினும், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்கையில் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு வாகனங்களுக்கு எந்தவொரு தடை அல்லது சேதம் ஏற்படும் வகையில் இழுத்துச் செல்லல் ஆகாது.

17. எவரேனும் ஆளொருவரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தின் உள்ளே,

(அ) வாகனங்களைக் கழுவுதல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல்.

(ஆ) ஏதேனும் வாகனத்தை அப்புறப்படுத்தும் கருமத்திற்காக அத்தகைய வாகனத்தை இயங்கச் செய்வதற்கு அத்தியாவசியமான திருத்த வேலைகளையோ டயறொன்றை மாற்றும் பணியோ அல்லாத வேறு பழுதுபார்த்தலைச் செய்தல்.

(இ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பழுதுபார்த்தலின்போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறான விடயம் பற்றிய கருத்திற் கொள்ளல் தவிர தேவையற்ற அல்லது தடையாகவுள்ள ஏதேனும் ஒலி அல்லது ஒலிகளை எழுப்புதல்.

(ஈ) குறித்த வாகன நிறுத்துமிடத்தில் ஓடு பாதை அல்லது உட்செல்லல் அல்லது வெளிச்செல்லல் வாயில்களுக்கு இடைஞ்சலாகும் விதத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தல்.

(உ) விபத்தொன்றைத் தவிர்த்துக்கொள்ளல் அல்லது வாகனத்தில் அல்லது அதில் தங்கியிருப்போரின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளல் பணியைத் தவிர வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அபாய அறிவிப்பு தெரிவிக்கும் உபகரணத்தை ஒலிக்கச் செய்தல்.

(ஊ) மதுபானம் அருந்தல் அல்லது வெற்றிலை எச்சில் துப்புதல் அல்லது கெட்ட வார்த்தைகளை பாவித்தல் அல்லது குழப்ப நிலையை ஏற்படுத்தல் அல்லது ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றைப் புரிதல் ஆகாது.

18. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தினதும் பாதுகாப்பு பற்றிய பொறுப்பு அத்தகைய வாகன நிறுத்துமிடத்தினுள் வாகனத்தை நிறுத்தும் ஆளைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதோடு, ஏதேனும் வாகனத்திற்கு வாகன நிறுத்துமிடத்தினுள் நிகழும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளரின் அல்லது வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் பொறுப்பு கூறுதலுக்கு உள்ளாகல் ஆகாது.

19. தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் அல்லது எவரேனும் பொலிஸ் அலுவலரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியிடமிருந்து வாகனத்திற்காக விநியோகிக்கப்பட்ட உட்பிரவேச அனுமதி அட்டையை பரிசோதிப்பதற்காக கோரப்படும் சந்தர்ப்பத்தில் அதைப் பரிசோதிப்பதற்காக வழங்குதல் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியின் பணியாதல் வேண்டும்.

20. 7 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தினுள் அமைந்துள்ள ஓட்டப் பாதைகளில் வாகனங்கள் செலுத்தப்படவேண்டிய திசையைக் காட்டுவதற்காக குறியீடு செய்யப்பட்ட திசைக்கு முரணான திசையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனும் வாகனம் செலுத்தப்படல் ஆகாது.

21. ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் செய்யப்பட்டுள்ள நிர்மாணத்திற்கு அல்லது அங்கு காணப்படுகின்ற ஏதேனும் உபகரணத்திற்கு சேதம் விளைவித்தல் அல்லது உருக்குலைத்தல் எவரேனும் ஆளினால் செய்யாதிருத்தல் வேண்டும்.

22. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் உட்பிரவேசிப்பதற்கான அனுமதி அட்டையின்றி நிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தை அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து அகற்றுவதற்கு தெஹிஓவிட்ட பிரதேச சபை தவிசாளரின் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

23. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,- ''வழி'' என்பது தெஹிஓவிட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு, தெஹிஓவிட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை, அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம், ஏதேனும் வகையிலான மதகு, நீர்க்கடவை, மதில் வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளுசு, துணைமதில், கைப்பிடி, சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

''வாகனம்'' என்பது, மோட்டார் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடலுக்கு பொருத்தமான வாகனம் கருதப்படல் வேண்டும்.

24. இத்துணைச்சட்டம் சம்பந்தப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் சட்டத்தினை மீறுதல் குற்றமாவதுடன் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுவதோடு அவ்வாறு குற்றவாளியாக்கப்பட்டதன் பின் அல்லது குறித்த மீறல் சம்பந்தமான கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் தெஹிஓவிட்ட பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒரு அலுவலரினால் எழுத்துமூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்ததன் பின்பும் மீறலை தொடர்ந்தும் மேற்கொள்வாரெனின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் தெஹிஓவிட்ட பிரதேச சபையின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் அவ்வாறான மீறல்கள் விடயமான மேலதிக தண்டத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

25. இத்துணைச்சட்டத்தின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் பொருள் சம்பந்தமாக பொருந்தாமை ஏதும் ஏற்படுமிடத்து சிங்களப் பிரதி செல்லுபடியானதாதல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

*13 ஆம் துணைச்சட்டத்தின் (ஆ) பந்தி*

| தெஹிஓவிட்ட பிரதேச சபை<br>............ வாகனத்<br>தரிப்பிடம்<br>வாகன நிறுத்தல் கட்டணம் | தெஹிஓவிட்ட பிரதேச சபை<br>............ வாகனத்<br>தரிப்பிடம்<br>வாகன நிறுத்தல் கட்டணம் | |
|---|---|---|
| வாகன இலக்கம் :-----<br>திகதி :-----<br>வருகை தந்த நேரம் :-----<br>வெளியேறிய நேரம் :-----<br>அறவிடப்பட்ட கட்டணம் :-----<br>வாகனக் கட்டுப்பாட்டாளரின் கையொப்பம் :----- | வாகன இலக்கம் :-----<br>திகதி :-----<br>வருகை தந்த நேரம் :-----<br>வெளியேறிய நேரும் :----- | தொகை ரூபா |

## இரண்டாம் அட்டவணை

தெஹிஓவிட்ட பிரதேச சபை

வாகன நிறுத்தல் அனுமதிப்பத்திரம்

அனுமதிப்பத்திர இலக்கம்-

தெஹிஓவிட்ட பிரதேச சபையின் தவிசாளர் ................................ ஆகிய என்னால் ...................................... வாகனத் தரிப்பிடத்தில் .................. திகதி முதல் ........................................ திகதி வரை .................... இலக்க வாகனத்தை நிறுத்தி வைப்பதற்காக அதன் உரிமையாளரான திரு. ......................................... அவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

.........,
தவிசாளர்,
பிரதேச சபை,
தெஹிஓவிட்ட.

**மூன்றாம் அட்டவணை**

அறவிடப்படவேண்டிய கட்டண விபரம்

1. முச்சக்கர வண்டியொன்றை தொடர்ந்து வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தும் போது மாதாந்த அல்லது வருடாந்தக் கட்டணமொன்றைச் செலுத்தலாம்.

| | | |
|---|---|---|
| வருடாந்தம் | - | ரூபா 1,000 0 |
| மாதாந்தம் | - | ரூபா 150 0 |

2. வேன், பேரூந்து, லொறி, டிப்பர், பெட்டியுடனான உழவு இயந்திரம், பெட்டியுடனான ஏனைய வாகனங்களை தொடர்ந்து வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தும்போது மாதாந்த அல்லது வருடாந்தக் கட்டணமொன்றைச் செலுத்தலாம்.

| | | |
|---|---|---|
| வருடாந்தம் | - | ரூபா 1,500 0 |
| மாதாந்தம் | - | ரூபா 200 0 |

3. தொடராக வாகனத்தரிப்பிடத்தினை உபயோகிக்காத, வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்படுகின்ற வாகனங்களுக்காக விதிக்கப்படுகின்ற கட்டணங்கள்.

| | | |
|---|---|---|
| * | துவிச்சக்கர வண்டிக்காக | 10 0 |
| * | முச்சக்கர வண்டிக்காக | 20 0 |
| * | கார், வேன், ஜீப், கெப் வண்டி மற்றும் மோட்டார் வண்டிகளுக்காக | 40 0 |
| * | பேரூந்து (இ. போ. ச. அல்லாத), லொறி, டிப்பர் வண்டி, பெட்டியுடனான உழவு இயந்திரம், பெட்டியுடனான ஏனைய வாகனங்களுக்காக | 50 0 |
| * | மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்காக | 60 0 |

வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்ற முதல் மணித்தியாலயத்திற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களும் தாமதிக்கின்ற மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் ரூபா 10 வீதமும் அறவிடப்படுதல் வேண்டும்.

**வாடகைக்கு விடப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படுகின்ற இடங்கள்**

* தெஹிஓவிட்ட வாகனத் தரிப்பிடம்
* தல்துவ - அமிதிரிகல வீதியின் ஆரம்பம்
* தல்துவ கேகாலை வீதியில் வித்தியாலய ஒழுங்கை அருகிலிருந்து கொலொன்ன சர்விஸ் நிலையம் வரை
* (அவிஸ்ஸாவலை நோக்கி வீதியின் இடப்பக்கம்)
* இஹல தல்துவ மஞ்ஞொக்கா கஹ யட கடை சந்தி
* திம்பிரிபொல - பிடதெனிய சந்தி
* அடுலுகம சந்தி
* தெபேகம சந்தி
* கனங்கம - அடுலுகம சந்தி
* கனங்கம நகரம்
* தரணியகலை வீதியில் உடபாகே சந்தி
* தரணியகலை வீதியில் திகல சந்தி
* தரணியகலை வீதியில் தெல்ஒழுவ சந்தி
* தரணியகலை வீதியில் தங்கம்பல சந்தி
* தரணியகலை வீதியில் சியம்பலாகஹ சந்தி
* குருகல்ல சந்தி
* குருகல்ல - வெலிபிடிய சந்தி
* நாபாவல சந்தி
* யோகம சந்தி
* முருத்தெட்டுவ சந்தி
* படங்கல சந்தி
* கம்பிஅடிய சந்தி
* பனாவல சந்தி
* பதுவத்த சந்தி
* அம்பலம்பிடிய சந்தி
* கொடகம்பல சந்தி
* ரங்கேகம சந்தி
* போமழுவ சந்தி
* வெலன்கல்ல சந்தி
* நிகவலமுல்ல வெல் பாலத்திற்கருகில்
* தெஹிஓவிட்ட -எஹலியகொட வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில்
* கஹனாவிட ஓடை அருகில்

## தெஹியோவிட்ட பிரதேச சபை

வாரச் சந்தையை நடாத்திச் செல்வது தொடர்பான நிலையான துணை விதிகள்

1. இந்த நிலையான துணைவிதிகள் தெஹியோவிட்ட பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் வாரச்சந்தையை முறையாக்கல் கண்காணித்தல், ஆளுதல், முகாமைத்துவப்படுத்துவதையே நிலையான துணைவிதிகள் என பொருள்படும்.

2. சபையின் மூலமாக நடாத்திச் செல்லப்படும் ஏதேனும் ஒரு வாரச்சந்தை தொடர்பாக இந்நிலையான துணைவிதிகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை பின்பற்றுவது தெஹியோவிட்ட சபை மூலமாக செயற்படல் வேண்டும்.

(i) வாரச்சந்தையின் அனைத்து கட்டிடங்களும் செங்கற்களினால் அல்லது கல்லினால் நிலையாக கட்டுமாண பொருளினால் அல்லது நிலையான கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு அனைத்து வாரச் சந்தை கட்டிடங்களின் நிலத்திற்கு கொங்ரீட் இட்டு நிலமட்டத்தில் இருந்து குறைந்தபட்சம் ஒரு அடியாவது உயரத்தில் கட்டிட நிலம் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(ii) கூரை ஏதேனும் நிலையான பொருளினால் கட்டப்பட்டு நிறைவுபெற்றிருத்தல் வேண்டும்.

(iii) கட்டிடம் உட்பட வியாபாரக் கடை அறைகள் குறைந்தபட்சம் இடைவெளி இரண்டு மீட்டர் அகலத்தில் இருக்க வேண்டியதோடு அது மேடை வாடிக்கையாளர்களின் பயணங்களுக்கு பொருத்தமான முறையில் நிலையான கட்டுமாணப் பொருளினால் கட்டப்பட்டிருக்க வேண்டியதோடு மழைநீர் பயணிகளின் போக்குவரத்துக்கு தடையாக இல்லாமல் வடிந்தோடும் வகையில் செயற்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) வாரச் சந்தை உட்பட கட்டப்படுகின்ற அனைத்து வியாபாரத் தட்டுக்களும் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கடிக் கல்லினால் கட்டப்பட்ட தட்டின் மேல் அல்லது கரைப்படியாத உலோகத்தினால் நிறைவுப்பெற்ற தட்டாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் கொங்ரீட் தட்டினால் நிறைவு செய்திருப்பின் அதில் தட்டை மெழுகு செய்து சீமெந்தில் பூசி அல்லது சலவைக்கல் பிடித்திருக்க வேண்டும். அம்முறைப்படி வியாபார தட்டை கட்டுவதற்கு முடியாமல் செல்லும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நிலமேற்பரப்பில் சமதரையாக இருக்கும் இடப்பகுதி கட்டப்பட்டிருக்க வேண்டியதோடு அதன் பகுதிகள் செங்கற்களினால், சீமெந்துக் கற்களினால் அல்லது கருங்கற்களினால் நிறைவுபெறச் செய்து சீமேந்தில் மெழுகு செய்திருக்க வேண்டியதோடு ஒவ்வொரு பகுதியையும் பிரித்திருக்கும் கோட்டு அடையாளங்கள் வெள்ளை நிறத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(v) அனைத்து கூரைகளுக்கும் மழை நீர் குழாய்கள் இடப்பட்டிருக்க வேண்டியதோடு மழை நீர் குழாயில் சேரும் நீர் கீழ் நோக்கி வடிந்து செல்வதற்கு போதுமான அளவு குழாய்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(vi) நிலையான இடத்தின் பயன்பாட்டிற்காக நீரை சேமித்து வைப்பதாயின் அவ்வாறு சேமித்து வைத்திருக்கும் நீர் அசுத்தமடைவதை தடுப்பதற்காக போதுமான அளவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(vii) ஆண், பெண் இருபாலாருக்கும் மற்றும் அங்கவீனர்களுக்காக விசேட வசதிகளுடனான வேறுவேறாக செய்யப்பட்டிருக்கும் மலசலகூடங்கள் போதுமான அளவு எண்ணிக்கையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு அவற்றில் அனைத்து மலசலகூடங்களும் குறைந்தளவு நிலமட்டத்தில் இருந்து ஒரு மீட்டர் உயரத்தில் சலவைக் கல் பிடித்து இருக்க வேண்டும்.

(viii) வாரச்சந்தை கட்டிடங்கள் இரண்டுக்கிடையில் வாடிக்கையாளர்கள் நடந்துசெல்லும் நடைபாதை மழையும் வெயிலும் படாதவாறு மூடப்பட்டிருப்பதோடு கூரையினால் வடியும் மழை நீர் முறையாக காண்தொகுதியினூடாக வடிந்தோடு வதற்கு தயார் செய்து இருக்க வேண்டும்.

(ix) வாரச்சந்தை வளாகத்தினுள் சபையின் மூலமாக அனுமதியளித்த திட்டத்திற்கு ஏற்ப சிற்றுண்டிச்சாலை அல்லது தேநீர் கடையொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(x) வாரச்சந்தையின் அனைத்து வியாபார நிலையங்களுக்கும் தேவைக்கு பயன்படுத்துவதற்காக மின்சார வழங்கலை பெற்றுக்கொடுப்பது சபையின் அலுவலாகும்.

(xi) வாரச்சந்தை வளாகத்தினுள் சமய அனுஷ்டானங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக வசதிகளை பெற்றுக்கொடுப்பது சபையின் அலுவலாகும்.

(xii) வாரச்சந்தை வளாகத்தினுள் பொது நீர் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xiii) மரக்கறி அல்லது பழங்களை கழுவுவதற்கு இடமொன்றை வேறாக்கி இருக்க வேண்டியதோடு பொது மலசலகூடத்தில் இருக்கும் நீர்க்குழாய் மற்றும் குடிநீருக்காக பொருத்தி இருக்கும் நீர்க்குழாய் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தக் கூடாது.

(xiv) வாரச்சந்தை வளாகத்தினுள் மற்றும் கூரையின் மேல் பொழிகின்ற மழை நீர் மற்றும் மரக்கறி பழங்கள் கழுவுதற்காக வேறாக்கி இருக்கும் இடத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர் ஒழுங்கான முறையில் பாய்ந்தோடுவதற்கு போதுமான அளவு காண் தொகுதியொன்று கட்டப்பட்டு இருக்க வேண்டியதோடு அதில் கழிவு நீர் ஏதேனும் ஒரு தடையில்லாமல் வடிந்தோடுவதற்கு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(xv) வாரச்சந்தையினுள் வியாபார இடங்களில் அமைப்பை கருத்திற்கொண்டு தெஹியோவிட்ட சபையின் மூலமாக இறைச்சி, மீன், கருவாடு, மரக்கறிகள், பழங்கள் மற்றும் சில்லறை பொருட்கள் மற்றும் வேறு வியாபார பொருட்கள் விற்பனைக்காக வாரச்சந்தை பகுதிகளுக்கு பிரித்து வேறாக்குவது, பெயர்ப்பட்டியலை காட்சிப்படுத்துவது தெஹியோவிட்ட சபையின் செயலாக இருக்க வேண்டும்.

(xvi) சூழலில் பெருகும் கழிவுப்பொருட்கள் ;

(அ) உக்காத மற்றும் திண்ம பொருட்கள் ;
(ஆ) கண்ணாடி ;
(இ) கடதாசி அல்லது கடதாசியை அண்மித்த பொருட்கள் ;
(ஈ) பிளாஸ்டிக் அல்லது பிளாஸ்டிக்கை அண்மித்த பொருட்கள் ரிஜிபோம் ;

(உ) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோக கலப்பட பொருட்கள் ;
(ஊ) ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருட்கள்.

வேறு வேறாக சேர்த்து சேமிக்கக்கூடிய தொட்டி அல்லது பாத்திரம், வாரச் சந்தையில் வேறு இடத்தில் வைக்க வேண்டியதோடு உக்காத திண்ம பொருட்களை இடக்கூடிய தொட்டி அல்லது பாத்திரம் எலி, ஈ, வேறு கிருமிகள், பூச்சிகள் மற்றும் எந்த ஒரு பறவைகளும் உள் நுழைவதற்கு முடியாத வகையில் நன்றாக மூடுதல் அல்லது சூழலில் பெருகும் குப்பைகளை வெளியேற்றுதல் தொடர்பாக ஒழுங்கான முறையில் வழிவகைகளை செய்திருக்க வேண்டும்.

3. (i) வாரச்சந்தையில் காணப்படும் ஏதேனும் வியாபார நிலையத்தில் பண்டங்களை விற்கும் நபர்கள் அல்லது வாரச்சந்தையினுள் நடமாடும் வியாபாரத்திற்காக பற்றுச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொண்ட யாதேனும் ஒரு நபர் மூலம் வியாபாரச் சூழல் அல்லது அதற்கருகில் அல்லது வியாபார தட்டின் மேல் அல்லது அதற்கருகில் பெருகும் அனைத்து கழிவுப்பொருட்கள்

(அ) உக்காத மற்றும் திண்ம பொருட்கள் ;
(ஆ) கண்ணாடி ;
(இ) கடதாசி அல்லது கடதாசியை அண்மித்த பொருட்கள் ;
(ஈ) பிளாஸ்டிக் அல்லது பிளாஸ்டிக்கை அண்மித்த பொருட்கள் ரிஜிபோம் ;
(உ) இரும்பு மற்றும் வேறு உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் உலோக கலப்பட பொருட்கள் ;
(ஊ) ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருட்கள்.

போன்ற வகையின் கீழ் வகைப்படுத்தி அதில் ஒவ்வொரு வகையிலும் தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலமாக கட்டியிருக்கும் வேறுவேறான தொட்டிகளினுள் அல்லது பாத்திரங்களுக்கு அல்லது தொட்டிகளுக்கு இடுவதற்கு அல்லது சபையின் மூலமாக கழிவுப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக அறிமுகப்படுத்தி இருக்கும் வழிமுறைகளுக்கு ஏற்ப அகற்றுவது அதில் உள்ள நபர்களின் வேலையாக இருக்க வேண்டும்.

(ii) வாரச் சந்தையில் காணப்படும் கழிவுப்பொருட்களை சேர்க்கும் உறைகள் அல்லது பாத்திரங்கள் அல்லது குப்பைத் தொட்டியில் போடுவதற்கு வேறாக்கி இருக்கும் கழிவுப்பொருட்களை உரிய தொட்டியினுள் இடாமல் மற்றைய தொட்டியில் இடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

(iii) இரண்டாவது நிலையான துணைவிதியில் 16 ஆவது பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி உக்காத கழிவுப் பொருட்களை தொட்டியில் இடும் போது அல்லது அதற்கு வெளியே எடுக்கும் சந்தர்ப்பத்தில் தவிர்ந்து மற்றைய எல்லா சந்தர்ப்பத்திலும் தொட்டியை மூடி முறையாக அல்லது மூடப்பட்ட நிலையில் இருக்க வேண்டும்.

4. (i) ஏதாவது ஒரு வாரச்சந்தையின் வியாபாரத்திற்காக வேறாக்கி இருக்கும் இடப்பிரமாணம் என்பது சபையின் மூலமாக உறுதியாக அடையாளப்பட்டிருக்க வேண்டும் என பொருள்படும்.

(ii) விற்பனைக்காக வாரச் வாரச்சந்தைகளுக்கு எடுத்து வரப்படு கின்ற எந்த ஒரு பொருளும் பொருள், பண்டம் அல்லது வியாபாரத் திற்காக பயன்படுத்தும் ஏதேனும் ஒரு உபகரணம் அல்லது வேறு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது வெளியில் எடுத்து செல்லும் சந்தர்ப்பம் தவிர்ந்த மற்றைய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் 4 முதலாவதில் குறிப்பிட்டுள்ளவாறு வியாபாரத்திற்காக வேறுப்படுத்தி இருக்கும் எல்லைகளுக்கு வெளியே வைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) வாரச்சந்தையினுள் உட்பட்ட எல்லையை அடையாளமிட்டு வியாபார நடவடிக்கைகளுக்காக அனுமதியளித்திருக்கும் சூழலினுள் அல்லது நடமாடும் வியாபாரத்தை மேற்கொள்வது தொடர்பாக அனுமதியை பெற்று தந்திருக்கும் இடங்களை தவிர்ந்து வேறேதேனும் இடத்தில் வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது என்பதோடு நடைபாதை பகுதிகளில் நடமாடும் நபர்களுக்கு தடையாக அமையாத முறையில் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

5. 2 (ix) ஆம் பிரிவில் குறிப்பிட்ட இடத்தை தவிர்ந்து வாரச்சந்தை சூழலினுள் வேறு ஏதேனும் ஒரு இடத்தில் சமையல் செய்வது எந்த ஒருவருக்கும் தடை செய்யப்பட்டதாகும்.

6. தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு சொந்தமான ஏதேனும் ஒரு வாரச்சந்தையில்

(i) உள்ளே ஒழுக்கயீனமாக நடந்துக்கொள்வது அல்லது கோலாகலங்கள் செய்வது அல்லது போதைபொருட்களை பாவித்தல் அல்லது தகாத சொற்களை பாவித்தல் அல்லது பிச்சை எடுத்தல்.

(ii) நாளாந்த நடவடிக்கைகளின் முடிவில் வாரச்சந்தையை மூடியதன் பிறகு அந்த சூழலில் தங்கி இருத்தல்.

(iii) ஏதேனும் ஒரு கட்டிடத்திற்கு கட்டுமானத்தில் அல்லது பொருத்துவதற்கு அல்லது அழகுக்காக வளர்க்கப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள பூச்செடிகளுக்கு அல்லது பெயர்ப்பலகைக்கு அல்லது வேறு ஏதேனும் பொருட்களுக்கு நாசம் செய்வது அல்லது நட்டம் ஏற்படுத்துவது அல்லது அலங்கோலப்படுத்தல்.

(iv) பாவனைக்காக வழங்கியிருக்கும் நீரை அசுத்தப்படுத்துவது அல்லது வீண்விரயம் செய்தல் அல்லது வீணாக்குவதற்கு இடமளிப்பது அல்லது வேறு ஏதேனும் வழியில் வீண்விரயம் செய்தல் அல்லது நீரினால் குளித்தல், அல்லது துணி அல்லது விலங்குகளை மற்றும் மரக்கறி பழங்களை கழுவுவதற்கு வேறுப்படுத்தி இருக்கும் இடத்தை தவிர ஏதேனும் ஒரு இடத்தில் மரக்கறிகளை அல்லது பழங்களை கழுவுதல்.

(v) மின்சார இணைப்பை பெற்றுத்தந்திருக்கும் பிரதான சாவிப்பலகைகளுக்கு அருகில் அண்மிப்பதற்கு தடையாக இருக்கும் முறையில் பொருட்பண்டங்களை வைப்பது அல்லது பிரதான சாவிப்பலகைக்கு பாதிப்பை ஏற்படுத்தல்.

(vi) நீர் இணைப்பை பெற்றுத்தருவது தொடர்பாக கட்டிடத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பிரதான நீர்க்குழாய்களை அல்லது வேறு ஏதேனும் நீர்க்குழாய் மூலமாக திருட்டுத்தனமாக நீர் இணைப்பை பெற்றுக்கொள்ளல்.

(vii) உரிய செயற்பாட்டிற்காக வேறாக்கிய இடங்கள் தவிர்ந்த ஏதேனும் ஒரு வகையை சேர்ந்த மரக்கறி, இறைச்சி, ஈ அல்லது மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு திட்டமிடல்.

(viii) வாரச்சந்தையினுள் தயார் செய்து இருக்கும் வாகன தரிப்பிடத்தை தவிர மற்றைய இடங்களுக்கு சைக்கிள் அல்லது மோட்டார் வண்டி அல்லது மோட்டார் வாகனங்களை எடுத்துக்கொண்டு வருவதற்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு அனுமதித்தல், யாரேனும் ஒருவரால் செய்யப்படக்கூடாது.

7. (i) ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொற்று நோயினால் அல்லது தொற்று பாதிக்கப்பட்ட அல்லது அண்மையில் அத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த யாதேனும் ஒருவர் ஒருவரை பாமரித்தலில் ஈடுபட்டிருந்த ஒருவர் அத்தகைய நோய் பரவும் அல்லது நோய் பரவக்கூடிய காலப்பகுதி தடைபட்டிருந்தால் மட்டுமே வாரச்சந்தையினுள் ஏதேனும் ஒரு வகையின் வியாபாரத்தில் அல்லது வியாபாரிக்கு உதவியாளராக இருத்தல் அல்லது உதவியாளராக இருப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

(ii) நன்றாக கழுவி சுத்தமாக்கிய உடைகளை அணிந்திருப்பின் மட்டுமே எவரேனும் அல்லது யாரேனும் மூலம் பொது வியாபார நிலையதில் ஏதேனும் முறைப்படி வியாபாரத்தில் ஈடுப்படுவது அல்லது ஈடுபட இடமளிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

8. வாரச்சந்தை நடைபெறும் தினத்திற்கு முன் தினம் முழுமையாக சுத்தப்படுத்தி வாரச்சந்தை நடைபெறும் தினத்தின் முடிவில் மீண்டும் ஒருமுறை முழுமையாக சுத்தப்படுத்துவது பிரதேச சபையின் கடமையாகும்.

9. வாரச்சந்தை சந்தையில் மரக்கறி, பழங்கள், இறைச்சி, மீன், கருவாடு பல்வேறு உணவுகள் அல்லது குளிர்பான வகைகள் விற்பனை செய்கின்ற நபர்கள் மூலம் உரிய வாரச்சந்தை நடாத்தும் தினமுடிவில் தான் வியாபாரத்தில் ஈடுப்பட்ட இடம் அல்லது தட்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் கழுவி அல்லது வழித்து சுத்தப்படுத்த வேண்டும்.

10. தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலமாக வியாபார சந்தை வளாகத்தினுள் வேறாக்கி கொடுக்கப்பட்டுள்ள எந்த வகைப் பொருளுக்கும் அல்லது பொருள் விற்பனைக்காக வேறுபடுத்தப்பட்ட பண்டம் அல்லது பொருள் தவிர்ந்த ஏதேனும் ஒரு வகையான பண்டம் அல்லது பொருள் விற்பனை செய்வதற்காக கண்காட்சிப்படுத்துவது எவர் ஒருவராலும் தவிர்க்கப்பட வேண்டும்.

11. மாடுகளை வெட்டும் சட்ட விதிகளின் கீழ் முறையான ஒரு அனுமதி பத்திரம் பெற்று இருக்கும் கால்நடைகளை வெட்டும் இடத்தல் கொல்லப்பட்ட ஏதேனும் ஒரு பிராணியின் இறைச்சியாக இருப்பின் மட்டுமே வாரச்சந்தையில் இறைச்சி விற்கும் இடத்தல் விற்பனைக்காகவே அல்லது விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தவோ அல்லது களஞ்சியப்படுத்தவோ யாரேனும் ஒரு நபருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

12. ஏதேனும் கால்நடைகள் வெட்டப்படும் இடத்தினுள் ஏதேனும் ஒரு தினத்தில் இறைச்சிக்காக விலங்குகளை கொல்வது தடைசெய்யப்பட்டு கால்நடை வெட்டப்பட்ட 17 ஆவது அதிகாரங்களுக்கு உரிய அதிகாரங்களின் மூலம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் வாரச்சந்தையினுள் நடாத்தி செல்லப்படும் ஏதேனும் ஒரு இறைச்சிக்கடையில் வியாபார செய்யும் நோக்கில் வைத்துக்கொள்வது அல்லது வியாபார நோக்கில் காட்சிப்படுத்துவது அல்லது களஞ்சியப்படுத்தல் போன்றவற்றை செய்யக்கூடாது.

13. எவரேனும் ஒரு நபரின் மூலமாக வாரச்சந்தை வளாகத்தினுள் நாயொன்றை அல்லது பூனையொன்றை வேறு ஏதேனும் விலங்கு ஒன்றை அல்லது பறவையொன்றை எடுத்து வருவது, வருவதற்கு இடமளிப்பதை தவிர்க்க வேண்டும். ஆகியவற்றை அனுமதிக்க இக்கட்டளை ஏதேனும் ஒரு பரிசோதனைக்காக எவரேனும் ஒரு பொலிஸ் அதிகாரியின் மூலமாக பொலிஸ் நாயொன்றை வாரச்சந்தையினுள் எடுத்து வரப்படுவது தடுக்கப்பட்ட கட்டளை என விளங்கிக் கொள்ளக்கூடாது.

14. வாரச்சந்தையை முழுமையாக மூடி வைக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும் வாரச்சந்தையில் ஏதேனும் ஒரு வியாபாரத்தட்டொன்றை மூடி வைத்து வெளியே செல்லும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த வியாபார வளாகத்தினுள் அனைத்து மின்சார விளக்குகளும், மின் விசிறிகளும் மற்றும் வேறு மின்சார உபகரணங்களும் செயலற்றுப் போக செய்ய வேண்டும்.

15. 2 XI பிரிவின் சட்ட பிரகாரம் வசதிகள் செய்யப்பட்டிருக்கும் இடங்களை தவிர வாரச்சந்தை வளாகத்தினுள் வேறு ஏதேனும் ஒரு இடத்தில் சமய செயற்பாடுகளுக்காக விளக்கு மெழுகுவர்த்தி போன்றவற்றை பற்ற வைக்கக்கூடாது.

16. வாரச்சந்தையில் இருக்கும் அனைத்து மலசலகூடம் மற்றும் சலகூடங்கள் வாரச்சந்தை நடைபெறும் அனைத்து தினங்களிலும் குறைந்தப்பட்ச நாளொன்றுக்கு மூன்று தடவை கிருமிநாசினி இட்டு கழுவி விடுவதன் மூலம் சுத்தப்படுத்துவதற்கு நீர் வடிந்து செல்வதற்கு கட்டியிருக்கும் அனைத்து காண்களும் வாரச்சந்தை நடைபெறும் தினத்தில் நாளொன்றுக்கு இரண்டு தடவையாக கழுவி சுத்தப்படுத்தி அமைத்துக்கொடுப்பது தலைவரின் கடமையொன்றாகும்.

17. 2 ஆவது நிலையான துணைவிதியில் XVI ஆவது பந்தியில் இருக்கும் முறைப்படி கட்டியிருக்கும் பக்கி பாத்திரம் அல்லது தொட்டியில் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்கள் வாரச்சந்தை நடாத்தப்படும் தினத்தில் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது அவசியமாக இருப்பின் அதற்கு மேற்பட்ட தடவையாவது அவ் இடத்திலிருந்து அகற்றுவதற்கு திட்டமிடுவது தலைவரின் கடமையாகும்.

18. வாரச்சந்தையில் ஏதேனும் ஒரு வியாபார நிலையத்தை பயன்படுத்துவதற்கு 23 ஆவது நிலையான துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கும் யாரேனும் ஒரு நபர் மூலம் அந்த அனுமதி பத்திரத்தை வேறு ஒருவருக்கு வழங்குவது அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள விற்பனை கூடம் அல்லது விற்பனை தட்டு தவிர்ந்த மற்றும் ஒரு இடத்தில் வியாபாரத்திற்கு பயன்படுத்தக்கூடாது. யாராவது ஒருவர் அவ்வாறு செய்திருந்தால் தலைவர் அவர்களுக்கு அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் திருப்தி அடையும் வகையில் அவர் உரிய இடத்தில் வியாபாரம் செய்வதற்கு வழி செய்தல் அல்லது அத்தினத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. ஈடுபடும் சந்தர்ப்பத்தில் வாரச்சந்தையிலிருந்து வெளியேற்றல், அல்லது அவருக்கு வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்தை இரத்துச்செய்தல்.

19. ஏதேனும் ஒரு வாரச்சந்தையின் வியாபார நிலையத்தை பயன்படத்துவதற்கு அல்லது பாவிப்பதற்கு பெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு நபர் மூலம் இடத்தை தீர்மானித்தல் தொடர்பாக சபையினுடன் உருவாக்கி கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் தன்னுடைய வியாபார நடவடிக்கைகளுக்காக வேறாக்கி இருக்கும் வியாபார நிலையத்தின் இடவசதி இல்லாவிடின் ஏதேனும் ஒரு பகுதி ஏதேனும் ஒரு பண்டம் அல்லது பொருள் வியாபாரம் செய்வதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்காக காட்சிப்படுத்தல் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்காக ஏதேனும் ஒரு காரியத்துக்காக மற்றொருவருக்கு இடமளிப்பது கூடாது.

20. தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலமாக ஏற்கனவே தீர்மானித்த நடவடிக்கைகளுக்காக அதிகாரம் கொடுக்கப்பட்டு இருப்பின் தவிர எவரேனும் ஒருவர் வியாபார வளாகத்தினுள் நிர்ணயிக்கப்பட்ட கட்டடத்தை மாற்றுதல், அல்லது அந்த திட்டத்தை பாதிப்படைய செய்யும் வகையில் எந்த ஒரு கட்டுமான அல்லது இணைப்புக்களில் மாற்றங்களை செய்யக்கூடாது.

21. தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலம் நடாத்திக்கொண்டு செல்லப்படும் ஏதேனும் ஒரு வாரச்சந்தையை திறந்து வைக்க வேண்டிய தினம் அல்லது நேரங்கள் முன்னதாகவே தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்க முடியும். தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலம் தீர்மானம் எடுத்து இருக்கும் முறைப்படி வாரச்சந்தை திறந்திருக்கும் நாட்கள் மற்றும் நேரங்கள் எவ்வாறு என்பதை மும்மொழிகளிலும் அறிவித்திருக்க வேண்டும் அல்லது அறிவித்தல் விளங்கும் முறைப்படி வாரச்சந்தை உட்பட நுழைவாயிலிற்கு அருகில் காட்சிப்படுத்துவதற்கு முயற்சிப்பது தலைவரின் கடமையாகும்.

22. வாரச்சந்தை வியாபார நிலையங்களில் வியாபாரத்தில் ஈடுப்பட எந்த ஒரு நபரும் தெஹியோவிட்ட சபையின் மூலமாக இந்நிலையான துணைவிதிகள் முதலாவது அட்டவணையில் தயார் செய்து இருக்கும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருந்தால் மட்டுமே விற்பனையில் ஈடுபட முடியும். அதன் கட்டணம் பற்றிய விபரங்கள் தெஹியோவிட்ட பிரதேச சபையில் மாற்றம் செய்யப்பட்டாலும் அது சட்ட விதிமுறைகளுக்கு ஏற்பவே அமையும்.

23. தெஹியோவிட்ட பிரதேச சபையின் வாரச்சந்தை வியாபார வளாகத்தில் பிரித்துக்கொடுப்பதற்காக கையொப்பமிட்டு இருக்கும் இடத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்கான உடன்படிக்கை பத்திரத்தின் கட்டளைகளுக்கு மற்றும் வரையறைகளுக்கு கட்டுப்பட்டதை தவிர யாரேனும் ஒரு நபர் மூலம் வாரச்சந்தையில் வியாபார வளாகத்தில் பயன்படுத்து அல்லது உபயோகிக்க செய்யக்கூடாது.

24. வாரச்சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் எந்த ஒரு நபரும் தெஹியோவிட்ட பிரதேச சபையின் இரண்டாவது அட்டவணையின் பிரகாரம் வருடாந்த கையொப்பம் இடுகின்ற வியாபார வளாகத்தின் இடத்தை வேறாக்கல் (இடத்தை நிர்ணயிப்பதற்கான) உடன்படிக்கை பத்திரத்திற்கு கையொப்பம் இடவேண்டியதோடு உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும்.

25. 23 ஆவது நிலையான துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு உரித்தான ஏதேனும் வாரச்சந்தையில் ஒவ்வொரு விற்பனை நிலையங்கள் தொடர்பாகவும் தெஹியோவிட்ட பிரதேச சபையினுடன் புதிதாக கையொப்பம் இடப்பட்ட வாரச்சந்தையினுள் இடங்களை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள விற்பனை செயற்பாட்டில் ஈடுபடும் ஒருவர் அது நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 24 ஆவது நிலையான துணை விதிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப புதிய உடன்படிக்கையில் உள்ளடக்க வேண்டும்.

26. (i) 24 மற்றும் 25 ஆவது நிலையான துணைவிதியிலிருந்து கட்டளையீன் கீழ் தெஹியோவிட்ட பிரதேச சபையினுடன் கையொப்பமிடப்பட்ட ஏதேனும் ஒரு உடன்படிக்கை ஒரு வருடத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் மற்றும் அவ்வருட காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காக தெஹியோவிட்ட பிரதேச சபையினுடன் புதிய உடன்படிக்கையின் மூலம் மேலும் ஒரு வருடத்திற்கு அந்த விற்பனையை பெற்றுக்கொள்வது சட்டரீதியானதாகும். அந்த வகையில் ஒவ்வொரு வருடத்துக்குமாக விற்பனை நிலையத்தின் உடன்படிக்கையை வருடா வருடம் புதுப்பித்து கொண்டு அவ் இடத்தை பயன்படுத்துவது அந்த உடன்படிக்கையாளருக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

(ii) எப்படியாயினும் 26 (i) பந்தியில் கீழ் யாரேனும் உடன்படிக்கையாளர் மூலம் எதிர்வரும் வருடத்திற்காக உடன்படிக்கைக் குள்ளான காலத்தை புதுப்பித்துக்கொண்டு விற்பனை நிலையத்தை பயன்படுத்துவது அதில் வியாபார வளாகத்தை பயன்படுத்தல் அல்லது பாவிப்பதற்காக உரிய வருடத்தில் செலுத்த வேண்டிய நாளாந்த அனுமதிப்பத்திர கட்டணம் இந்நிலையான துணைவிதியின் 3 ஆவது அட்டவணையில் சுருக்கமாக குறிப்பிடப்பட்ட வேண்டும்.

27. ஏதேனும் வியாபார வளாகத்தின் உடன்படிக்கை காலம் முடிவடையும் திகதியில் இருந்து ஒரு மாத காலத்தினுள் 30 ஆவது நிலையான துணைவிதியின் கீழ் எதிர்வரும் வருடத்திற்காக உடன்படிக்கை காலம் புதுப்பிக்கப்பட்டிருப்பின் தவிர அல்லது பாவிப்பதற்கு தந்திருக்கும் ஒரு வியாபார வளாகத்தில் ஒரு மாதம் முடிவடையும் தினத்திற்கு பிறகு பயன்படுத்துவதற்கு அல்லது பாவிப்பதற்கு உரிமை ஒன்று இல்லாது இருக்க வேண்டும்.

28. வியாபார சந்தையில் ஏதேனும் வியாபாரத்தை ஒதுக்கி கொடுத்து இருக்கும் உடன்படிக்கை பத்திரத்திற்கு ஏற்ப வியாபார வளாகத்தை ஒதுக்கி கொண்டு இருக்கும் உடன்படிக்கையாளரை தவிர வேறுபடும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட சட்டமில்லை என்பதோடு அவ்விடத்தில் வேறு யாரேனும் வியாபார நடவடிக்கையில் ஈடுப்படுத்தப்பட்டிருப்பது தெளிவான உடன்படிக்கையில் இரத்து செய்த காரணத்தினால் மற்றும் வியாபார வளாகம் மீண்டும் தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு சொந்தமாக்கி கொள்வதன் காரணமாக அதன் உடன்படிக்கையாளருக்கே நடக்கும் ஏதேனும் ஒரு நட்டம் அல்லது பாதிப்பு அல்லது அநியாயம் அந்த உடன்படிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதோடு ஏதேனும் ஒரு நட்டம் அல்லது பாதிப்பொன்றை அவரே ஏற்க வேண்டும்.

29. வாரச்சந்தை வியாபார வளாகத்தினுள் ஒதுக்குவதற்கு உடன்படிக்கைக்கு உள்ளாகும் போது தெஹியோவிட்ட பிரதேச சபையின் பொது சபையின் மூலம் காலத்திற்கு காலம் கட்டளையிடப்படுகின்ற உடன்படிக்கையாளர் மூலம் ஒரே தடவையாக செலுத்தவேண்டிய பணத்தை வாங்கி கொண்டு உடன்படிக்கையை செய்துக்கொள்வது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

30. (i) வாரச்சந்தையில் ஏதேனும் ஒரு வியாபார நிலையமொன்றிற்காக உடன்படிக்கையாளரினால் தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்தி கிடைக்கவேண்டிய ஒவ்வொரு தினத்திலும் அட்டவணை இலக்க 2 இல் குறிப்பிட்டுள்ளபடி அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்துமாறு வருமான நிர்வாகி அல்லது சபையின் தலைவரின் மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட வேறு எவரேனும் ஒரு அதிகாரி வேண்டப்படுகின்ற சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின்றி வியாபார அனுமதியற்ற நடவடிக்கைகளில் ஈடுப்படும் எந்த ஒரு நபருக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுப்படுபவரை போல கவனித்து வியாபார நடவடிக்கையிலிருந்து அகற்றுவது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

(ii) வாரச்சந்தை நடாத்தப்படும் ஏதேனும் ஒரு தினத்தில் முதல் தடவையாக வரும் ஒருவருக்கு உடன்படிக்கையின்றி அன்றைய தினத்திற்கு மாத்திரம் விற்பனை அனுமதி பத்திரம் ஒன்றை பெற்றுக்கொண்டு வியாபார சூழலை பயன்படுத்துவதற்கு முடியுமாவதோடு ஆரம்பிக்கப்படும் அதன் பிறகு ஆரம்பிக்கப்படும் வாரச்சந்தை தினமாகும் போது சட்டத்திற்கு ஏற்ப வியாபார சூழலை ஒதுக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) 30 I பிரிவின் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரதாரரின் பிரிவு அல்லது அனுமதி பத்திரதாரரின் அல்லது அனுமதி பத்திர பொறுப்புதாரரின் அதிகாரம் கொண்ட சேவை ஆட்கள் மத்தியில் அல்லது மக்கள் மத்தியில் வியாபார நிலையம் பயன்படுத்தல் தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தலைவர் மூலம் அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்படும் ஒருவரினால் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

(iv) சந்தை அமைந்திருக்கும் வளவினுள் சமாதானத்தை நடாத்திச் செல்வதற்கு சபையின் மூலமாக நியமிக்கப்படுகின்ற மற்றும் அமைந்திருக்கும் வளவினுள் சேவையில் ஈடுப்பட்டிருக்கும் அதிகாரியினால் மற்றும் அதிகாரங்களினால் செய்யப்படவேண்டும்.

(v) பொருட்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு சந்தைக்கு சமுகமளிக்கின்ற அனைத்து நபர்கள் மூலமாகவும் சபையின் அதிகாரி ஒருவரினால் அல்லது பொலிஸ் அதிகாரி ஒருவரின் மூலம் ஏதேனும் ஒரு குழப்பத்தை செய்வதற்காக அல்லது சமாதானத்தை பாதுகாப்பதற்காக வழங்கப்படுகின்ற சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டளைகளை பின்பற்றல் வேண்டும்.

(vi) சந்தை அமைந்திருக்கும் வளவினுள் விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருக்கும் உணவுப்பொருட்கள் ஆகாரத்திற்கு உகந்தவை அல்ல என்பது தெளிவாயின் தலைவரின் மூலம் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் மூலம் அல்லது சபைத் தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற யாரேனும் ஒரு சுகாதார பரிசோதனையாளரின் மூலம் அவ்வுணவு பொருட்களை பரிசோதனை செய்து தடை செய்வது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

(vii) vi பந்தியில் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட பொருளொன்றை ஆகாரத்திற்கு பொருத்தமானதல்ல எனச் சான்றிதழ் வழங்கப்பட்டால் அப்பொருளை தடை செய்வதிலிருந்து அந்த பொருளின் சொந்தகாரரிற்கு நட்டஈட்டை வழங்காமல் அப்பொருளை அழிக்க முடியும்.

(viii) சபைத் தலைவரின் அனுமதியை எழுத்துமூலம் பெற்றுக்கொள்ளாமல் தனக்கு வழங்கப்பட்டு இருக்கும் வியாபார நிலையத்திற்கு அருகில் அல்லது இடவளவில் ஏதேனும் ஒரு பகுதியை மறைப்பை ஏற்படுத்தல் அல்லது ஏதேனும் ஒரு பகுதியை அமைத்துக்கொள்ள அல்லது கூரை ஒன்றை அமைத்தல், அல்லது ஏதேனும் தற்காலிகமாக அல்லது ஒரு நிரந்தரமான ஒரு மாற்றத்தை செய்தல், அவ்வியாபார நிலையத்திலேயே அருகில் உள்ள அல்லது இடப்பிரமானத்தில் செய்யக்கூடாது.

(ix) சபைக்கு உரித்தாகாத சொத்தொன்று பெட்டியொன்று, மேசையொன்று, கதிரையொன்று, அல்லது எவ்வாறாயினும் பொருளொன்று சபை தலைவரின் அனுமதியில்லாமல் தம்முடைய வியாபார நிலையத்திற்கு அருகிலோ அல்லது வியாபார நிலையத்திற்கு எடுத்து வருதல் அல்லது அங்கு வைத்துக்கொள்ளுதல் போன்றன அவ்வியாபார நிலையத்தில் அல்லது அவ்வியாபார நிலையத்திற்கு அருகில் ஏதேனும் ஒரு கூடாரம் அமைப்பது அல்லது வேறு ஏதேனும் ஒரு உபகரணத்தை பொருத்தக்கூடாது.

31. வாரச்சந்தை சூழலினுள் பொதுவாக இடப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு மின்சார இணைப்பின் மூலம் அல்லது பொது நீர்க் குழாய்களின் மூலம் ஏதேனும் ஒரு வியாபார நிலையத்திற்கு மின்சார வழங்கலொன்றை அல்லது நீர் வழங்கலொன்றை பெற்றுக்கொள்வது அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கு இடமளிப்பது போன்றவற்றை செய்யக்கூடாது.

32. வியாபாரச் சந்தையில் வியாபார நிலையத்தை பயன்படுத்துவதற்கு அல்லது பாவிப்பதற்கு தேவையான யாரேனும் நபர்களுக்கு அனுமதிப்பத்திரமொன்றை வெளியிடுவதற்கு அல்லது அதன் அனுமதி பத்திரத்திற்காக பணத்தை பெற்றுக்கொள்வதற்காக செயலாளரின் அதிகாரம் ஏதேனும் ஒருவருக்கு இட முடியும். அதே போன்று அதிகாரம் கொண்ட அதிகாரியின் மூலம் அனுமதி பத்திரத்தை வெளியிடுவது தினமும் சேகரிக்கப்படும் பணம் அன்றைய தினம் பகல் 3.00 மணிக்கு முன் தெஹியோவிட்ட பிரதேச சபையின் பொது நிதிக்கு வரவு வைக்க தயார் செய்து அதன் அதிகாரம் கொண்ட அதிகாரி ஒருவரின் கடமையாகும். சேகரிக்கப்பட்ட பணம் தெஹியோவிட்ட சபையின் நிதிக்கு வரவு வைக்க முடியாமற் போயின் வாரச்சந்தையில் அனுமதிப் பத்திரத்தை வெளியிடுவதில் சேகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பணமாக இருப்பின் அது குறிப்பிடப்படுகின்ற வேலை செய்யும் தினத்தில் தெஹியோவிட்ட பிரதேச சபையின் பொது நிதிக்கு வரவு வைக்க வேண்டும்.

33. வாரச்சந்தையில் கடை அறைகள் மற்றும் வியாபார தட்டு பயன்படுத்தலுக்கு அல்லது பாவிப்பதற்கு வேறு ஏதேனும் அனுமதி பத்திரம் வெளியிடுதல் மற்றும் அதற்காக பணத்தை சேகரித்தல்

32 ஆவது துணைவிதியில் நியமிக்கப்பட்டு இருக்கும் முறைப்படி செயலாளரின் அதிகாரம் அளிக்கப்பட வேறு எவரேனும் ஒரு அதிகாரிக்கு ஒப்படைப்பதற்கு முடியாமற் போயின் அப்பணியில் பிரசித்தமான கேள்வி அழைப்பின் ஊடாக தெரிவு செய்யப்படும் (இதன்பிறகு கட்டணம் அறவிடுபவர் என குறிப்பிடப்படுகின்ற) தெஹியோவிட்ட ஒருவருக்கு வழங்குவதற்கு சபைக்கு அதிகாரம் உள்ளது.

34. 33 ஆவது நிலையான துணைவிதிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஏதேனும் ஒரு பணச்சேகரிப்பாளருக்கு இந்த பொறுப்பை ஒப்படைத்த ஒரு வருடத்திற்காக மட்டும் அனுமதியளிக்கப்பட வேண்டியதோடு அடுத்த வருடத்திற்காக மீண்டும் கேள்விஅழைப்பு விடுவதினூடாக கட்டண அறவிடுபவர் ஒருவரை தெரிவுசெய்து கொள்ள வேண்டும். அவ்வாறு கடந்த வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கட்டணம் அறவிடுபவருக்கு எதிர்வரும் ஆண்டுக்காகவும் கேள்வி விண்ணப்பத்திற்கும் கேள்வி விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது சபை தீர்மானிப்பதாயின் அவர் எதிர்வரும் வருடத்திற்கும் கட்டணம் அறவிடுபவராக தெரிவு செய்வதற்கும் துணை விதிச்சட்டங்களுக்கு ஏற்ப தடுக்கப்பட்டுள்ளதாக கருதப்பட கூடாது.

35. (i) 33 ஆவது நிலையான துணைவிதிகளின் கட்டளைகளின் அடிப்படையில் கட்டணங்கள் சேகரிப்பாளர் ஒருவரை தெரிவுசெய்யும் போது-

(அ) தெரிவு செய்வதற்காக கேள்வி அழைப்பு விடும் சந்தர்ப்பமாகும் போது தெஹியோவிற்ற பிரதேச சபையின் மூலமாக தீர்மானம் எடுக்கப்பட்டு இருக்கம் பெறுமதி ரோடு மீள் செலுத்தும் மற்றும் மீள் செலுத்தாத பிணை வைப்புக்கள் பணம் தெஹியோவிட்ட பிரதேச சபையில் வைப்பு செய்தல்.

(ஆ) அனுமதி பத்திரம் வெளியிடுதல் மற்றும் கட்டணம் சேகரித்தல் தொடர்பாக தெஹியோவிட்ட பிரதேச சபையினுடன் உடன்படிக்கை களுக்கு முன் வருதல்.

(இ) பந்தியின் (ஆ) இன் கட்டளைகளின் கீழ் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையில் சம்மதித்திருக்கும் மாதாந்த கூலித்தொகையாக 03 மடங்கு பணம் பாதுகாப்பு பிணையாளராக தெஹியோவிட்ட பிரதேச சபையில் வைப்புச் செய்வதற்கு.

(ஈ) 35 (i) பந்தியில் குறிப்பிட்டுள்ள கட்டளைகள் அம்முறைப்படியே பூரணமாக்கியிருப்பின் தவிர வேறு எவரேனும் ஒரு நபருக்கு தெஹியோவிட்ட பிரதேச சபையினால் நடாத்தி செல்லப்படும் ஏதேனும் ஒரு வாரச்சந்தையில் வியாபார நிலையத்தை பயன்படுத்தும் நபர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடுவதற்கு மற்றும் அதன் அனுமதி பத்திரத்திற்கு பதிலாக பணத்தை சேகரிப்பதற்கு இடமளிக்கக்கூடாது.

36. 23 ஆவது நிலையான துணை விதிகளின் கட்டளையின் அடிப்படையில் ஏதேனும் ஒரு வாரச்சந்தையின் வியாபார நிலையத்தை பயன்படுத்துவதற்கு அல்லது பாவிப்பதற்கு தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலமாக தீர்மானித்து இருக்கும் கட்டணமொன்று அல்லது கட்டணமொன்றை அறவிடுதல் வேறு எவரேனும் கட்டணம் சேகரிப்பதன் மூலம் செய்யக்கூடாது.

37. 36 ஆவது நிலையான துணைவிதி இலக்கம் (1) ஆம் பந்தியில் (ஆ) துணை பந்தியில் கட்டளைக்கு ஏற்ப வேறு எவரேனும் கட்டண அறவீட்டாளருடன் தெஹியோவிட்ட பிரதேச சபை கையொப்பம் இடப்படுகின்ற உடன்படிக்கையில்,

(i) வியாபார நிலையங்களை பயன்படுத்துவது தொடர்பாக அனுமதிப்பத்திரத்தை வெளியிடும் முறை.

(ii) அனுமதிப்பத்திரத்திற்காக பணத்தை அறவிடும் மற்றும் முடிந்தளவு அறவிட முடியுமான பண அளவு.

(iii) கட்டண அறவீட்டாளர் மூலம் உடன்படிக்கை செய்து கொள்ளும் வருடத்திற்காக தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய முழுத்தொகை மற்றும் ஒரு தவணையின் பெறுமதி.

(iv) ஒரு வருடத் தொகை சமமான 12 தவணை முறையாக தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய மற்றும் ஒரு தவணையின் பெறுமதி.

(v) ஒவ்வொரு மாதத்திற்குமாக செலுத்த வேண்டிய பணம் தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்தும் தினம்.

(vi) குறித்த தினத்தில் மாதாந்த தொகையை கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கட்டணத்தில் நூற்றுக்கு பத்து வீதத்திற்கு சமமான அளவு தாமத கட்டணமாக தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு கட்டணம் அறவிடுபவரின் கடமை ஆகும்.

(vii) உடன்படிக்கை செய்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடுபவரின் ஊடாக மூன்று மாதத்தினது கூலித்தொகைக்கு சமமான பாதுகாப்பு பிணை வைப்பு செய்துக்கொள்ள வேண்டும் என்பதை உடன்படிக்கைக்கு உள்ளான விதிகள் என்ற வகையில் உள்ளடங்க செய்வது சபையின் கடமை ஆகும்.

38. (i) கட்டண அறவீட்டாளர் மூலம் தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த கொடுப்பனவுகளை செலுத்தாமல் இருக்கும் அதன் மிகுதி தொகை கட்டணம் இரண்டு மாதக் கட்டணங்களை விட அதிகமாகும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தென் மிகுதி தொகை மற்றும் தாமதம் பணம் செலுத்துமாறு கட்டண அறவீட்டாளரிடம் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை வழங்குவது செயலாளரின் கடமையாகும்.

(ii) 38 (i) ஆம் இலக்க பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி தொகை மற்றும் தாமத கட்டணத்தை - தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு செலுத்துவதாக இருப்பின் மட்டும் அந்த அறிவித்தல் அவருக்கு கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து ஏழு நாட்கள் முடிவடைந்த தினத்தில் அந்த பணத்தை அறிவிப்பவருக்கு தெஹியோவிட்ட பிரதேச சபை கையொப்பமிட்ட உடன்படிக்கை மீறப்படுவது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். அதேபோன்று அந்த உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டதாக கருதப்படும் தினத்திலே கட்டண அறவீட்டாளரிடம் அது பற்றி எழுத்து மூலம் அறிந்து அனுப்புவது செயலாளரின் கடமை ஆகும்.

(iii) *38* (ii) ஆம் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஏதாவது ஒரு உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட தினத்தின் பின் எந்த சந்தர்ப்பத்திலும் குறிக்கப்பட்ட உடன்படிக்கையாளருக்கு உரியவராகிய கட்டணம் அறவிடுபவர் மூலம் குறிக்கப்பட்ட வாரச்சந்தையின் விற்பனை நிலையம் பயன்படுத்துவதற்கு எந்த ஒருவருக்கும் அனுமதி பத்திரம் வழங்குவது அல்லது அனுமதி பத்திரத்தை பணம் அறவிடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

(iv) *38* (ii) ஆம் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஏதாவது ஒரு உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட தினத்தின் பின் அடுத்த தினத்திலிருந்து வாரச்சந்தை வியாபார நிலையத்தை பயன்படுத்துவது அனுமதிப்பத்திரத்தை வழங்குவது மற்றும் அனுமதிப்பத்திர பணம் அறவிடுவது தெஹியோவிட்ட சபை யாதேனும் அதிகாரம் பெற்ற ஒருவரை நியமிப்பது செயலாளரின் கடமையாகும். மேலும் அதிகாரம் பெற்ற ஒருவரால் அக்காரியங்களை நிறைவேற்றுவது முடியாது என செயலாளர் கருத்தாக அமையும் போது *34* ஆவது நிலையான துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஏற்ப செயற்படுத்துவது தனது கருத்தினை செயலாளர் மூலம் தெஹியோவிட்ட பிரதேச சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். அந்த வகையில் செயலாளரின் கருத்து சபைக்கு முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் *34* நிலையான துணைவிதிக்கு ஏற்ப செயற்படுவது தெஹியோவிட்ட பிரதேச சபையின் மூலம் தீர்மானிக்கப்படலாம். அவ்வாறு இல்லாவிட்டால் சபை தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வாரச்சந்தை விற்பனையில் ஈடுபடுபவருக்கு அனுமதிப்பத்திரங்களுக்காக பணம் அறவிடுவது சட்டரீதியானதாக அமையும்.

*39*. வாரச்சந்தை நடாத்தப்படும் நாள் நேரம் என்ன என்பது பற்றி மும்மொழிகளிலும் அறிவிப்பது அல்லது காட்சிப்படுத்துவது அச்சந்தையில் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

*40*. தலைவர் அவர்கள் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் ஏதேனும் சந்தையில் விற்பனைக்கு அல்லது விற்பனை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது சேமிக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவு பொருட்களில் இருந்து மாதிரியொன்றை பணம் கொடுத்து பெற்றுக்கொள்வது சட்டரீதியாக அமைய வேண்டுமே தவிர யார் ஒருவராலும் அத்தகைய வாங்கலை மறுக்கவோ அதற்கு இடையூறு செய்யவோ முடியாது.

*41*. இப்பிரிவில் சட்டங்களை பரிசீலனை செய்வதற்கு தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு பரிசீலனை செய்வதற்குரிய அதிகாரம் கிடைக்கும் கால எல்லை என்பது குறித்துரைக்கப்பட்ட வாரச்சந்தை விற்பனை நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ள எந்த ஒரு நேரத்தையும் குறிக்கின்றது.

*42*. இந்த நிலையான துணைவிதியில் குறிப்பிட்டுள்ளப் படி எந்த ஒரு பகுதியையும் மீறப்படுவது குற்றமாகும். மேலும் எவரேனும் ஒருவர் உரிய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் *1987* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் *122* இல் இரண்டாவது பிரிவுக்கு ஏற்ப வழங்கப்படும் தண்டனைக்கு குற்றவாளியாக்கப்பட்ட பின்னும் அக்குற்றத்தை மீண்டும் செய்வாராயின் அத்தகைய கடை செய்வதில் அவதானத்தை செலுத்தி பிரதேச சபையின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் மூலம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்பும் அத்தவறை செய்யும் ஒவ்வொரு தினத்திற்காகவும் *1987* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் *122* இல் இரண்டாவது பிரிவு சட்டத்திற்கு ஏற்ப விதிக்கப்பட்ட மேலதிக தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்.

*43*. வாரச்சந்தையின் நிலையான துணைவிதிகளின் கருத்துக்களை மேலும் தெளிவுப்படுத்துதல்.

(அ) வாரச்சந்தை.- எல்லாவிதமான ஒரு வர்த்தக நேக்கத்திற்காகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபார சூழலானது தங்களின் வீட்டுத்தோட்டத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட மரக்கறி பழங்கள் அடங்கலாக வேறு எல்லாவிதமான பொருட்களையும் விற்பனை செய்வதற்கான இடம் என பொருள்படும். தெஹியோவிட்ட பிரதேச சபையின் ஊடாக நிர்மானிக்கப்பட்டுள்ள வியாபார ஸ்தானத்தை பாதுகாத்துக்கொள்வதோடு எந்த ஒரு பொருளும் மொத்தமாக செய்யும் அல்லது விற்பனை செய்யும் இடமாகும்.

(ஆ) உடன்படிக்கையாளர்.- தெஹியோவிட்ட பிரதேச சபையின் ஊடாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் ஏதாவது வாரச்சந்தையில் விற்பனை நிலையமொன்றை நடாத்தி செல்லப் படுபவர்.

(இ) வியாபார நிலையம்.- எந்த ஒரு வாரசந்தை கட்டிடத்திலும் நில்தில் கோட வரைவதன் மூலம் விற்பனை நடவடிக்கைகளுக்காக வேறாக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்தையும் குறிக்கும்.

**வாரச்சந்தை வியாபார உரிமையினை குத்தகைக்கு விடுவது தொடர்பான உடன்படிக்கை பத்திரம்**

ஒரு குழுவுக்கு (இதன் பிறகு) தலைவர் ஊடாக அறிமுகப்பட்டு கிடைக்கும் ................. பிரதேச சபை தலைவர் மற்றும் (இதன் பிறகு) செயலாளரின் ஊடாக குறிப்பிடப்படும் ............. பிரதேச சபைக்கு பதிலாக வருகை தர உள்ள மற்றும் செயற்பாடு ............ பிரதேச சபையின் தலைவர் மற்றும் செயலாளர் இன்னுமொரு பிரிவினருக்கு (இதன் பிறகு) உடன்படிக்கையாளர் என்று குறிப்பிடப்படும் ............. வதிவிடமான ................ என்ற அவர்களுக்கிடையில் வருடம் ......... க்கு .............. மாதம் .............. இல........................ பிரதேச சபை அலுவலகத்தில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கை பத்திரமாகும்.

................. பிரதேச சபைக்கு சொந்தமான ................. அமையப்பெற்றுள்ள வாரச்சந்தையின் ........... என்ற இலக்கத் தொடரை கொண்ட வியாபார தளத்தில் ............ வியாபாரம் நடாத்திக் கொண்டு செல்ல வியாபார தளத்தினை பயன்படும் உரிமை இதன் பிறகு காட்டப்படும் நிபந்தனைக்கு கட்டுப்பட்டு உடன்படிக்கையாளருக்கு பகிர்ந்தளித்து .............. பிரதேச சபைக்கு ஒத்துழைத்தல். அத்துடன் மிகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் காட்டப்பட்டுள்ள யாப்புகளுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கும் உடன்படிக்கையாளர்கள் ............. ஊடாக வியாபார தளத்தின் கொடுப்பனவாளரான ...................... பிரதேச சபை மற்றும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படும்.

உடன்படிக்கை குழுவின் ஊடாக வியாபார தளத்துக்கான கொடுப்பனவை வழங்கும் குழு ஆகிய ........... பிரதேச சபைக்கு இலங்கையின் பாவனையில் உள்ள பண அலகில் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவில் ரூபா ............ தொகையிலும் உடன்படிக்யையாளர் குழுவின் ஊடாக வியாபாரா தளத்தின் கொடுப்பனவு குழு செலுத்த வேண்டிய ............................பிரதேச சபைக்கு விதிமுறைகள், கட்டளைச் சட்டத்திட்டங்கள், சட்டக்கோவைகள் நிலையான துணை விதிகள் மற்றும் ............ பிரதேச சபையின் ஊடாக ஒவ்வொரு தடவையும் எடுக்கப்படும் சபையின் தீர்மானங்களுக்கு அடிப்பணிந்து தனது வியாபாரத்தை செய்து கொண்டு செல்வதற்கான உரிமை ......... வருடத்தின் ............. மாதம் ............. தினத்திலிருந்து ........... தினம் வரையும் ஒரு வருட காலம் அனுபவிப்பதற்காக உடன்படிக்கை குழுவின் கிடைக்கப் பெறுகின்ற வியாபார நிலைய உடன்படிக்கைச் செய்து கொண்ட இரு குழுவின் ஊடாக அவர்கள் மத்தியில் பின்பற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இதன் பிறகு காட்டப்படுகின்ற முறைப்படி வாக்கு கொடுத்ததன் பிறகு இவ் உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

**விதிமுறைகள் :**

1. ................ பிரதேச சபையின் மூலம் தீர்மானித்து இருக்கும் திட்டத்துக்கு ஏற்ப வாரச் சந்தை வியாபார நிலையம் வகைப்படுத்தல் மற்றும் நடைபெறுகின்ற இலக்கம் எண்ணிக்கைக்கு ஏற்ப உடன்படிக்கை குழுவான ......... என்னுடைய இலக்கம் .................... உடைய வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளை மாதம் .......... திகதியில் ....................... இலிருந்து ............. திகதி வரைக்கும் நடாத்திச் செல்வதற்காக ஒத்துக்கொள்கின்றேன்.

2. ..................... மாதம் ................. திகதியிலிருந்து ......... வருடத்தில் ................ மாதம் ............... திகதி வரைக்கும் வாரச்சந்தையில் வியாபார நிலையத்துக்காக இடத்தை ஒதுக்கிக் கொடுப்பது தொடர்பாக மீண்டும் செலுத்தாமல் ரூபாய் ............ பணத்தை வழங்குனர்களாக இருக்கும் .......... சபைக்காக செலுத்துவதற்கு உடன்படிக்கை குழு என்ற வகையில் .................. ஆக இருக்கும் நான் ஒத்துக்கொள்கின்றேன்.

3. இவ்இலக்கம் ........... உடைய வியாபார நிலையத்திற்காக செலுத்த வேண்டிய நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணம் இவ்வுடன்படிக்கையின் விதிமுறைகளை மீறுவதற்கான காரணமாக கருதிக் கொண்டு சபையிடம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதும் அல்லது உடன்படிக்கையாளர் மூலம் அவரின் சுயவிருப்பத்தின் பேரில் நிராகரிக்கப்படும் வரைக்கும் வாரச்சந்தை வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடும் அனைத்து நாட்களுக்கும் ரூபாய் ......... தொகை பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும்.

4. ஒரு வருடத்திற்கு ஒரு தடவை அல்லது பிரதேச சபை தேவை என கருதும் வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணம் மற்றும் மீண்டும் செலுத்தாத ஒரே தடவையில் செலுத்துகின்ற வியாபார கட்டணம் மீள் சோதனை செய்வதற்கு ............. பிரதேச சபைக்கு அதிகாரம் உள்ளது. .................... சபையினூடாக தீர்மானிக்கப்படு கின்ற திகதியிலிருந்து அவ்வாறு மீள்பரிசோதனை செய்யப்படுகின்ற நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணங்களையும் செலுத்துவது தொடர்பாக உடன்படிக்கைச் செய்து கொண்ட குழு ஒத்துக்கொள்கின்றது.

5. வியாபாரத்தில் ஈடுபடும் தினத்தில் பற்றுச்சீட்டுக் கட்டணத்தை செலுத்தாமல் ஒதுக்கப்பட்டிருக்கும் வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த ஒரு நபரையும் வியாபார நிலையத்தில் இருந்து வெளியேற்றுவது ............... பிரதேச சபையின் கடமை ஆகும்.

6. உடன்படிக்கை செய்துக்கொண்ட சாராருக்கு தேவைப்படின் ஒரு மாத காலம் கொடுத்ததன் பிறகு உடன்படிக்கை இரத்து செய்து கொள்வதற்கு முடியுமாவதோடு அவ்வாறு உடன்படிக்கையை இரத்துசெய்யும் சந்தர்ப்பம் வரை சபைக்கு செலுத்தி இருக்கும் எந்த ஒரு பணத்தொகையும் மீண்டும் கேட்டு பெற்றுக்கொள்வதற்கான உரிமையொன்று உடன்படிக்கை செய்துகொண்ட சாராருக்கு இல்லை. வியாபார நிலையத்தை வேறாக்கி கொள்ளும் போது ஒரே தடவையில் வைப்பில் இட்டு இருக்கும் தொகை உடன்படிக்கையை இரத்து செய்யும் நடவடிக்கைக்காக ஏதேனும் ஒரு நெருக்கடி அல்லது ஒரு பலவந்தம்படுத்த கூடாது என்பதோடு அவ்வாறு இரத்து செய்யும் போது உடன்படிக்கையாளர் மூலம் செலுத்தி இருக்கும் பணத்தை மீண்டும் செலுத்துமாறு வேண்டிக் கொள்வதற்கு உடன்படிக்கையாளருக்கு உரிமை இல்லை.

7. உடன்படிக்கையாளர் அவருடைய கூற்று அல்லது சேவகர்கள் மூலம் வேண்டும் என்று அல்லது சுயமாக உடன்படிக்கை செய்துக்கொண்டு ஒத்துக்கொண்டு இருக்கும் வியாபார நிலையத்தினுள் அல்லது உடன்படிக்கை செய்துகொண்ட சாரார்களின் பயன்பாட்டிற்காக வியாபார நிலையங்களின் வெளியே பொது வியாபார சந்தையில் பொருத்தப் பட்டிருக்கும் மின்சாரம், நீர், உபகரணங்கள், இணைக்கபட்ட கம்பிச் சுருள்கள் கதவு யன்னல், நுழைவாயில் ஆகியன ............... சபைக்கு சொந்தமான சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்படுத்த கூடாது. மேலும் உடன்படிக்கையை உடன்படிக்கையாளர் இரத்துச்செய்யும் போது உடன்படிக்கையாளரால் தன்னிடம் வைத்துள்ள உபகரணங்களை எடுத்துச்செல்லும் போது சபையின் சொத்துக்களுக்கு எவ்வித நட்டமும் ஏற்படக்கூடாது. மேலும் உடன்படிக்கையாளரின் உடன்படிக்கை முடிவுறும் காலத்தில் உடன்படிக்கையாளர் வைத்திருந்த உபகரணங்களை எடுத்து செல்லும் போது சபையின் சொத்துக்களுக்கு கவனயீனம் காரணமாக ஏதாவது ஒரு வகையில் நட்டம் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தகைய நட்டம் ஏற்பட்டால் ...................... சபையின் அதிகாரிகள் மூலம் அந்த சட்டம் தொடர்பாக வழங்கப்படும் மதிப்பீடு ................... சபைக்கு வழங்க வேண்டும். உடன்படிக்கையாளருக்கு சொந்தமான பொருட்கள் உபகரணங்களுக்கு ஏற்படும் எத்தகைய ஒரு நட்டத்துக்கும் சபை பொறுப்புக் கூறமாட்டாது.

8. உடன்படிக்கையாளர் வியாபார தளத்தின் ஏதேனும் ஒரு பகுதியை மற்றொருவருக்கு விற்று விட்டால் அல்லது வழங்குதல் அல்லது கீழ் குத்தகைக்கு விடுவதற்கு சபையில் அனுமதி இல்லாமல் அதிலிருந்து விலகுவதோ தடை செய்யவோ கூடாது. உடன்படிக்கையாளரால் விற்பனை நிலையத்தில் செய்துக்கொள்ள வரும் வியாபாரம் அல்லது அதன் ஒரு பகுதியை விற்றுவிடல் மாற்றுதல் பங்கு வியாபாரமாக மாற்றுதல் விருத்தி செய்தல் கூடாது.

9. நகராதிபதி/தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் விற்பனை நிலையத்துக்குள் வருவதற்கு உடன்படிக்கையாளரினால் இடமளிக்க வேண்டும். அதற்கு தேவையான சகல வசதிகளையும் அவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

10. உடன்படிக்கையாளரின் மூலம் அல்லது வியாபார தளத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் ஆக்கபூர்வமான அல்லது ஒரு வகையான மாற்றங்களை செய்யக்கூடாது. நகராதிபதி அல்லது தலைவரின் முழுமையான எழுத்துமூல அனுமதியை பெறாமல் நிரந்தர அல்லது தற்காலிகமான இணைப்புக்களை மேற்கொள்ள கூடாது.

11. வியாபார நிலையத்தை சுத்தமாகவும் ஆரோக்கியத்துக்கு ஏற்ற வகையில் அமைப்பது அவசியமாகும். ............... சபையின் அதிகாரிகளின் சிந்தனைக்கு ஏற்ற வகையில் அனைத்து வகையான உபகரணங்களும் பாத்திரங்களும் உடன் படிக்கையாளரினால் தன் விற்பனை நிலையத்துக்காக பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. உடன்படிக்கையாளரின் மூலம் நீர்வழங்கலுக்கு அல்லது கழிவு நீருக்கு தடை ஏற்படும் வகையிலும் அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படும் வகையில் காண்களுக்கு அல்லது நீர்த்தொட்டிகளுக்கு அல்லது வேறு பாத்திரங் களுக்கு ஏதேனும் பொருட்கள் அல்லது ஏதாவது ஒன்றை வீசுதல் கொட்டுதல் கூடாது.

13. குப்பை அல்லது அது தவிர்ந்து ஏனைய கழிவுப்பொருட்களை உரிய இடத்தில் கொட்டுவதை தவிர்ந்த ஏனைய வேறு இடங்களில் கொட்டுவதையோ அல்லது சேகரிக்கவோ கூடாது.

14. ஏதேனும் ஒரு விற்பனை நிலையத்தில் உள்ளேயோ வெளியேயோ சுவர்களில், காண்களில் விளம்பரங்கள் மற்றும் விளம்பர அட்டைகளை ஒட்டுதல் அல்லது பொருத்துவது கூடாது. ஏதேனும் விற்பனைக்கு உரிய ஏதாவது குறியீட்டு பலகைகள் அல்லது மற்றும் காட்சிப்பலகைகள் இருந்தால் ..................... சபையின் நகராதிபதி/தலைவர் அனுமதி வழங்கும் கௌரவ தலைவர் அல்லது நகராதிபதியின் அனுமதியோடு அவற்றை காட்சிப்படுத்த வேண்டும்.

15. உடன்படிக்கையாளரால் ஏதேனும் உபகரணங்கள் அல்லது பொருட்களை விற்பனை நிலைய கூரையில் வைக்கக் கூடாது.

16. ஏதேனும் ஒரு விற்பனை நிலையத்தின் எல்லைக்கு வெளியே செல்லும் வகையில் எந்த ஒரு வகையான பொருட்களோ உபகரணங்களோ ஒன்று குவித்தல் அல்லது சேகரித்தல் கூடாது. வாகனங்களின் மூலம் இடம் நகர்த்தப்படும். பொருட்கள் அல்லது உபகரணங்களை விற்பனை நிலையத்துக்கு உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

17. நியாயமான முறையில் தேவையான கால எல்லைக்கு மேலதிகமாக விற்பனை நிலையத்துக்கு பொருட்டுகள் மற்றும் உபகரணங்களை இடம் நகர்த்தும் வாகனங்கள் வாரச்சந்தையினுள் நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

18. வாரச்சந்தை நடைபெறும் தினத்தின் முதல் நாள் பிற்பகல் 3.00 மணி முதல் வாரச்சந்தை நடைபெறும் தினத்திற்கு அடுத்த நாள் காலை 9.00 மணிவரை சந்தையை திறந்து வைப்பதோடு, குறித்த நேரத்தை தவிர ஏனைய நேரங்களில் உடன்படிக்கையாளர்கள் அல்லது அவர்களின் ஊழியர்கள் விற்பனை நிலையத்தில் அல்லது கட்டிடத்தில் தங்கியிருக்க கூடாது.

19. உடன்படிக்கையாளர் அல்லது அவரின் ஊழியர்கள் எந்தவித துர்அதிஷ்ட நோய்கள் மற்றும் ஏனைய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக சந்தேகப்படும் இடத்து வைத்திய பரிசோதனைக்காக முன்வருதல், அல்லது ஊழியரை முன்வரச் செய்தல் வேண்டும். மேலும் சபையின் அதிகாரம் பெற்ற ஒருவரால் வைத்திய அறிக்கையினை கையளிக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட உடனடியாக அறிக்கையை கையளிக்க வேண்டும். உடன்படிக்கையாளர் தொற்று நோயினால் அல்லது துர்அதிஷ்ட நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் விற்பனை நிலையத்தில் எந்த ஒரு வேலையிலும் கலந்துக்கொள்ள முடியாது. மேலும் அத்தகைய ஊழியர்களையும் கலந்துக்கொள்ள செய்யக் கூடாது.

20. உடன்படிக்கையாளர் அவரின் தூதுவர்கள் அல்லது ஊழியர்கள் மூலம் இந்த உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள விதி முறைகள் சபையினால் வழங்கப்பட்டுள்ள வாரச்சந்தையின் தொடர்பான நிலையான துணை விதிகளில் எதிர்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் சட்ட ஏட்டில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை மீறக்கூடாது. அத்தகைய எந்த ஒரு சட்டத்திட்டங்களை மீறும் பட்சத்தில் அந்த உடன்படிக்கை இரத்து செய்து குத்தகை யாளரின் குத்தகை உரிமையையும் இரத்துச் செய்து அந்த விற்பனை நிலையத்தை சபைக்கு மீள பெற்றுக்கொள்ள காரணமாகும்.

21. இதில் கையெழுத்து இடப்பட்டுள்ள குழுக்களுக்கு இடையில் ஏதும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டால் அத்தகைய முரண்பாடுகளை அல்லது எதிர்ப்புக்களை ................. உள்ளூராட்சி திணைக்களத்தின் செயலாளர் அறிவிக்க வேண்டுமே தவிர இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்த குழுக்கள் மூலமாகவும் இந்த கருத்து முரண்பாடுகளை தீர்த்து

வைக்கும் தீர்ப்புக்காக வேண்டுகோள் விடுத்திருந்தால் தவிர அவர்ளின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும். எனினும் அந்த செயலாளரின் முடிவு எந்த ஒரு குழுவுக்கும் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அந்த குழுவால் எழுத்து மூலம் அவ்வாறு கேட்கப்பட்டிருந்தால் அந்த செயலாளரினால் கருத்து முரண்பாடு காரணமாக விடயத்தை பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்குவதற்கு பொருத்தமான ஒருவரை நியமிப்பார். 1995 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட சட்டத்தில் இந்த விடயத்தை பொருத்தமானதாக கொள்ளப்படும். சட்டம் தொடர்பாகவோ .................... குறித்தவர்களின் தீர்மானம் இறுதித் தீர்மானம் அல்லது தீர்வாகக் கொள்ளப்படும். இதில் தொடர்புபட்ட குழுக்கள் குறிக்கப்பட்ட தீர்மானத்தை அல்லது தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வருடம் ............ மாதம் ................. திகதி ................ குறிக்கப்பட்ட குழுக்களின் மூலம் பின்வரும் சாட்சியாளர்கள் முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

| ----, | ----, | ----, |
|---|---|---|
| நகராதிபதி/ தலைவர் ----- சபை. | நகர ஆணையாளர்/ செயலாளர் ---- சபை | உடன்படிக்கையாளர் |

சாட்சியாளர்கள் :

1. கையொப்பம் ------
   பெயரும் முகவரியும் ------

2. கையொப்பம் ------
   பெயரும் முகவரியும் ------

**முதலாம் அட்டவணை**

தெஹிஓவிட்ட பிரதேச சபையின் வாரச் சந்தையில் வியாபாரங்களை மேற்கொள்வதற்காக கடைகளை/இடங்களை ஒதுக்குவதற்காக அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்

1. முழுப்பெயர் :-----.
2. முகவரி :-----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. கடை அறை இலக்கம் :-----.
5. வியாபாரத்தின் தன்மை :-----.
6. ஊழியர்கள்/உதவியாளர்களின் எண்ணிக்கை :-----.
7. ஊழியர்கள்/உதவியாளர்களின் பெயர் அடையாள அட்டை இலக்கம் :-----.
   (i)
   (ii)
   (iii)
   (iv)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தெஹிஓவிட்ட பிரதேச சபையின் தல்தூவ வார சந்தையின் கடைகளை/இடங்களை ................ ஆம் இலக்க இடத்தில் ............... வியாபாரத்திற்காக ................ ஆந் திகதி முதல் ............. ஆம் திகதி வரையிலான காலத்திற்கு பிரதேச சபையுடன் இணங்கிய ஒப்பந்தத்திற்கேற்ப அங்கீகாரம் வழங்குகின்றேன்.

----,
தவிசாளர்/செயலாளர்,
தெஹிஓவிட்ட பிரதேச சபை.

12-29

# பதவிகள் - வெற்றிடம்

**மத்திய மாகாண சபை**

மத்திய மாகாண மாகாண சபை

**சபை செயலகம்**

அலுவலகத்தின் உதவிச் செயலாளர் பதவி

கீழே காணப்படும் தகுதிகளையுடைய தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

(1) **தகுதிகள்** : (i) இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் தரத்து அலுவலராகயிருத்தல்.

அல்லது

(ii) சாதாரண எழுதுவினைஞர் சேவையில் 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிர்வாகத்தரத்து அலுவலராக இருத்தல்.

(2) **சம்பளம்** : (i) இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் தரத்தில் உள்ளவராயின் இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தரத்து சம்பள அடிப்படையில் நியமிப்பதற்கும்.

(ii) சாதாரண எழுதுவினைஞர் சேவையில் அதி உயர் வகுப்பில் உள்ள அலுவலராகயிருப்பின் இ. நி. சேவையின் III ஆம் தரத்து சம்பள முறையில் நியமிக்கப்படும்.

*(3)* **விண்ணப்பித்தல்** : உங்களது விண்ணப்பப்படிவத்தை கீழே குறிப்பிடப்படும் மாதிரிப்படிவத்திற்கேற்ப தயாரித்து 2013.12.17ஆந் திகதிக்கு முன் கீழே காட்டப்பட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் "உதவிச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :

சபை செயலாளர்,
மத்திய மாகாண மாகாண சபை,
த. பெ. இல. 7,
பள்ளேகலை,
குண்டசாலை.

மகிந்த அபேகோன்,
தலைவர்,
மத்திய மாகாண மாகாண சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண சபை**

**சபை செயலகம்**

*உதவி செயலாளர் பதவி*

1. பெயர் :-----.
2. பிறந்த திகதி :-----.
3. ஆண்/பெண் :----.
4. விலாசம் :----.

| கடமை | தனிப்பட்ட |
|---|---|
| ------------------------------ | ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ |

5. (i) முதல் நியமனத் திகதி :-----.
   (ii) முதல் நியமனத்திற்கான பதவி :-----.
   (iii) தற்போது வகிக்கும் பதவி :-----.
   (iv) தற்போதைய பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :-----.
6. தகைமைகள் :-
   (அ) இ. நி. சேவையில் உள்ளவராயின்
   (i) தற்போதிருக்கும் வகுப்பு/தரம் :----.
   (ii) நியமிக்கப்பட்ட திகதி :----.
   (ஆ) முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதி உயர் வகுப்பில் உள்ளவராயின் :-
   (i) முதல் நியமனத் திகதி :-----.
   (ii) அதி உயர் தரத்தில் நியமிக்கப்பட்ட திகதி :----.
   (இ) பெற்றுக்கொண்டுள்ள அதி கூடிய கல்வித்தகைமை :----.
   (ஈ) தொழில் தகைமை :----.
7. வேறு தகுதிகள் :-

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் ..................... ஆக சேவை செய்கிறார் எனவும், அவரால் மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியெனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க இணங்குகிறேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

நிறுவனத் தலைவர் :----.
பெயர் :----.
பதவி முத்திரை :----.

திகதி : -----.

*12-178*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ட்ரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை – 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2013 |
| | | வெள்ளி | 13.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2013 |
| | | வெள்ளி | 20.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2013 |
| | | வெள்ளி | 27.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2013 |

**அட்டவணை – 2014**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2013 |
| | | வெள்ளி | 10.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2013 |
| | | வெள்ளி | 17.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2014 |
| | | வெள்ளி | 24.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2014 |
| | | வெள்ளி | 31.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2014 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.01.2014 |
| | | வியாழன் | 13.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.01.2014 |
| | | வெள்ளி | 21.02.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.02.2014 |
| | | வெள்ளி | 28.02.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.02.2014 |

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.